

# சிவதொண்டன்

**எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்**

மலர் - 88

சோபகிருது வருடம் மார்கழி - தை (2024 ஜனவரி பெப்ரவரி)

இதழ் - 1-2





திருச்சிற்றம்பலம்

வேயனைய தோளுமையொர் பாகமது வாகவிடை யேறிசடைமேல்
தூயமதி சூடிசுடு காடினட மாடிமலை தன்னைவினவில்
வாய்கலச மாகவழி பாடுசெய்யும் வேடன்மல ராகுநயனம்
காய்கணை யினாலிடந் தீசனடி கூடுகா ளத்திமலையே.

திருச்சிற்றம்பலம்

-திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்





**பொழிப்புரை :**

மூங்கிலைப் போன்ற தோளுடைய உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு , இடப வாகனத்தில் ஏறி , சடைமுடியில் தூயசந்திரனைச் சூடி , சுடுகாட்டில் நடனம் ஆடும் சிவபெருமான் வீற்றிருந்தருளும் மலை, வாயே அபிடேக கலசமாக வழிபாடு செய்த வேடராகிய கண்ணப்பர் தம் மலர்போன்ற கண்ணைக் கொடிய அம்பினால் தோண்டி இறைவனுக்கு அப்பி , இறைவனின் திருவடியைச் சார்ந்த சிறப்புடைய திருக்காளத்தி மலையாகும்.

சிவதொண்டன் நிலையம் - யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதொண்டன் நிலையம் யாழ்ப்பாணம்

## அறிக்கை

| பொருள் | காலம் | நாள் | இடம் |
|---|---|---|---|
| யாகம் | 07.01.2024<br>04.02.2024<br>03.03.2024<br>07.04.2024<br>05.05.2024<br>02.06.2024<br>07.07.2024<br>04.08.2024<br>01.09.2024<br>06.10.2024<br>03.11.2024<br>01.12.2024 | ஞாயிறு<br>ஞாயிறு<br>ஞாயிறு<br>ஞாயிறு<br>ஞாயிறு<br>ஞாயிறு<br>ஞாயிறு<br>ஞாயிறு<br>ஞாயிறு<br>ஞாயிறு<br>ஞாயிறு<br>ஞாயிறு | சிவதொண்டன் நிலையம்<br>யாழ்ப்பாணம். |
| ஆயிலியம் | 26.01.2024<br>23.02.2024<br>21.03.2024<br>17.04.2024<br>15.05.2024<br>11.06.2024<br>08.07.2024<br>05.08.2024<br>01.09.2024<br>28.09.2024<br>26.10.2024<br>22.11.2024<br>19.12.2024 | வெள்ளி<br>வெள்ளி<br>வியாழன்<br>புதன்<br>புதன்<br>செவ்வாய்<br>திங்கள்<br>திங்கள்<br>ஞாயிறு<br>சனி<br>சனி<br>வெள்ளி<br>வியாழன் | யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையம்<br><br>கொழும்புத்துறை<br>செங்கலடி சிவதொண்டன நிலையம் |

| | | |
|---|---|---|
| 08.03.2024 | வெள்ளி | சிவராத்திரி |
| 21.03.2024 | வியாழன் | குருபூசை |
| 25.03.2024 | திங்கள் | திருவடிபூசை |
| 01.09.2024 | ஞாயிறு | நல்லூர் கந்தசுவாமி தேர்த்திருவிழா |
| 04.11.2024 | திங்கள் | யாழ். சிவதொண்டன் ஆண்டுவிழா |
| 14.03.2024 | வியாழன் | செங்கலடி சிவதொண்டன் ஆண்டுவிழா |

*எதிர்வரும் மாசி மாதம் 25ஆம் நாள் (08.03.2024ல்) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலும் செங்கலடியிலும் உள்ள சிவதொண்டன் நிலையங்களில் மகாசிவராத்திரி அனுட்டிக்கப்படும். விரிவான அறிவித்தலை பின் அட்டை உட்புறம் பார்க்கவும்.*

# பொருளடக்கம்

**விடயம்** **பக்கம்**

| விடயம் | பக்கம் |
|---|---|
| கணபதி திருவவதாரம் | 01 |
| வாழ்த்துப்பா | 02 |
| கீதையின்சாரம் | 03 |
| தேகாந்த காலமும் ஏகாந்த சித்தமும் | 08 |
| சிவராத்திரி | 10 |
| சாமிமாரின் வியாபகம் | 12 |
| இருவகை அழகு | 15 |
| அன்பும் பக்தியும் | 17 |
| மூவரையும் தேவரையும் ஏவலாக்கு (ஆசிரியர்) | 19 |
| நற்சிந்தனை | 21 |
| Natchinthanai | 23 |
| இருமொழிகளில் எங்கள் ஆசான் | 24 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டன்

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

மலர் : 88 சோபகிருது வருடம் மார்கழி - தை (2024 ஜனவரி - பெப்ரவரி) இதழ் : 1-2


## கணபதி திருவவதாரம்

ஆனை முகக் கடவுள் அவதாரம் பற்றிச் சிற்றறிவுடையோர் பற்பல கதைகள் புனைந்தனர். ஆயின் கற்றோர் கூறும் கதையே கருத்துக் கியைந்தது. மேல்வரும் கதை விநாயக மான்மியத்தில் உளது.

பண்டொரு திருநாட் பரம சிவனார்
ஒண்டொடி உமையொடு கைலையை நீங்கி
கொன்றை கூவிளங் கோங்கு மந்தாரந்
துன்றிய நறுமலர்ச் சோலையின் மேவி
ஆங்கொரு சித்திர மண்டபத் தமர்ந்தார்
பாங்குள சுவரில் பலவகை மந்திரம்
அழகுறத் தீட்டி யவைமுகந் தனிலோர்
களிறொரு பிடியைக் கலந்த பான்மையின்
வடிவொரு பிரணவ வடிவமும் மேலாய்
இடமுற வெழுதிய வியல்புபார்த் திருவரும்
களிறையும் பிடியையும் கருத்தொடு நோக்க
மழைமத முக்கண் மருப்புயர் வாரணத்
திருமுகத் துடனோர் சிறிய பாலகனாய்
வரமருள் விநாயகன் வந்துமுன் னுதிப்ப
அம்மனும் அத்தனு மன்பொடா தரித்துத்
தம்முயர் கைலை வெற்பினைச் சார்ந்து
கண்பதி யெனப்பெயர் கவினுறச் சாத்திக்
கணங்களுக் கரசாய்க் கைலை வாசலில்
விந்தைகொள் முகப்பின் விளங்குற விருத்தி...

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

முன்னொரு காலத்தில் சிவபெருமானும் உமாதேவியாரும் கைலைச் சாரலி லுள்ள நந்தவனத்துச் சித்திர மண்டபத்திலே அமர்ந்திருந்தனர். அம் மண்டபச் சுவரில் பிரணவ மந்திரமும் காதல் மடப்பிடி களிறுடன் கலந்து நிற்கும் ஓவியமும் வரையப்பட்டிருந்தது. அம் மந்திரத்தையும் ஓவியத்தையும் பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் என்ற கருத்தோடு அம்மையும் அப்பனும் நோக்கினர். அத் திருநோக்கினால் ஆனைமுகப் பிள்ளையார் அவதரித்தார். சிவபெருமான் அவரைத் தம் கணங்களுக்கு அதிபராக்கி கணபதி எனும் திருநாமம் சூட்டி கைலை வாசலில் வீற்றிருக்குமாறு அருளினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துப்பா

சிவதொண்டு செய்துவரும் சிவதொண்டன் வரவைப்
பவனியில் பார்த்திருக்கும் அன்பர்- தவசிகளாம்
புத்தாண்டில் கால்பதித்துப் புத்தமுதம் சேர்ப்பானைச்
சித்தத்தில் வைப்பீர் சிறந்து

வேகம் கெடுக்கும் வேந்தன் இணையடி
ஆகம் உளவரை அன்பினில் வைக்கவும்
தேவன் நாமம் சிந்தையில் கொள்ளவும்
பாவ வினைகள் பறந்திடச் செய்யவும்
அமைதி யற்றே அலையும் மனத்தின்
சுமைகள் தொலைந்தே சுத்தம் பெறவும்
புறத்திலே தேடும் புனித இறைவனை
அறத்தில் நின்றே அன்பாய்க் காணவும்
அகத்தினில் மட்டும் அமைதி பெற்றே
செகத்தினில் மானிடர் சேவைகள் செய்யவும்
விதவிதமான அநுபவம் அடைந்தே
சதமென உலகைச் சந்ததம் நினைந்து
மதங்கள் தந்திடும் மலைவுகள் தீரவும்
நிதமும் அகத்தினில் நினைவு கொண்டே
புனிதன் அடியினைப் புணையென நம்பி
அனித்தம் யாவையும் அலசி ஆய்ந்தபின்
புனிதமாம் மெய்யைப் புகுதலே முடிந்த
நனிமிகு வழியென வாழ வைக்கவும்
அந்த மெய்மையில் அகலா திருக்கவும்
எந்த இடத்தும் எந்த வேளையும்
பத்தனைக் காணப் பரமன் வருவான்
அத்தனை உண்மை அதுவென எண்ணி
இருந்து கொண்டே இயல்பினில் நிற்பின்
கருத்தினில் அவனைக் கலந்தே மிகவும்
மகிழ்ந்து சுகந்தனில் சுகித்து வாழவும்
பகிரதி தன்னைப் பாரினிற் கொணர்ந்த
பன்னரும் அரசனின் பரந்த புகழென
இன்னமும் செழித்தே இகத்தினில் இருக்கவும்
தன்னைச் சரணமாய்த் தந்தவர்க் கெல்லாம்
அன்னை போல ஆக்கிடும் மைந்தன்
நற்சிவ தொண்டன் நலந்தர இந்த
அற்புத மான அகவை எண்பதும்
எட்டும் எய்திடும் ஆண்டிலும் வருகையில்
புட்பம் தூவிப் புனிதனாம் அவனை
மனமகிழ்ந் தேத்தி மாலைகள் சூட்டி
தினமும் வளர்கெனச் சிறப்பாய் வாழ்த்துவீரே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதையின் சாரம்

## 1) வேதங்களின் சாரமே கீதை

கீதை வேதங்களின் சாரத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பல விடயங்கள் பற்றிக் கீதை கூறுகின்றது. அவற்றுள் உண்மை, அறம், சமத்துவம் என்பவற்றின் விளக்கங்கள் பிரதானம் ஆனவை. அர்ச்சுனனுக்கு கிருஷ்ண பரமாத்மா கூறிய கருத்துக்களை ஆராய்வது பலருக்கு உபயோகமானதே. பிரதானமாகப் பிரமத்தைப் புரிந்து கொள்ளத் தேவைப்படும் மன நிலையை எய்துவதற்குப் பிரயோசனமானது. ஒருவருக்குத் தெய்வீக உணர்வு வாய்க்கப் பெற்றதும் அவருடைய மனம் வேறு எதனையும் நாட வேண்டிய தேவை இருக்காது. அவ்வாறான உயர்ந்த சமநிலையை எய்துவதற்கு இன்பதுன்பங்களால் வரும் உணர்ச்சிச் சிக்கல்களில் இருந்தும் அவர் வெளி வரவேண்டும். வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளினால் துன்பம் அடையும் போது அவற்றால் மனத்தளர்ச்சி அடைவது மனித இயல்பாகும். அவ்வாறான சோதனைக் காலத்தில் மரண தேவனின் முன் நிற்பது போல மனத்தளர்ச்சியைச் சிலர் வெளிப்படுத்துகின்றனர். ஆன்மிக ஒழுக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நாளாந்தப் பிரார்த்தனைகளின் போது தாம் வேண்டுவதைப் பெறச் சாதகர்கள் அந்நூல்களில் தஞ்சம் அடைகின்றனர். கங்கை நீர் ஒருவர் தன்னைச் சுத்தப்படுத்திக் கொள்ள எவ்வாறு கிடைக்கின்றதோ அவ்வாறே சாதகர்கள் தமது வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீரத்துக் கொள்ளக் கீதை கிடைத்திருக்கின்றது. ஒருவர் தர்மத்தின் வழி நடந்து கொள்ளவும், நல் வாழ்வுக்கு இடையூறாக வருவனவற்றில் இருந்து விடுதலை பெறவும் அவர் தனது மனநிலையை உயர்த்திக் கொள்ளவும் கீதை உதவுகின்றது.

ஒருவர் தானே உருவாக்கிக் கொள்ளும் சிக்கல்களில் இருந்து வெளியேறக் கீதை நிச்சயமாக உதவி வழங்கக் காத்திருக்கின்றது. இதனாலேதான் கீதை தன்னிடமும் பரமாத்மாவுடனும் தஞ்சம் புகும்படி அடியவர்களை ஊக்கப்படுத்துகின்றது. அதன் மூலம் மட்டுமே ஒருவர் கடவுளை உணர அது வழிகாட்டுகின்றது. ஆன்மிக ஆர்வலர்களின் பண்புகளும் அவர்கள் பெறும் பிரார்த்தனைகளின் பலன்களும் பரப்பிரமத்தின் அருளின் உச்சமாக அமைகின்றது. அவ்வாறான ஆர்வலர்களுக்கு இறைவனின் அருள்மழை என்றும் பொழிந்து கொண்டு இருக்கின்றது.

## 2. கீதையில் என்றுமுள்ள வேண்டுகோள்

கிருஷ்ண பரமாத்மாவின் போதனைகளைப் பின் வருமாறு சுருக்கமாகக் கூறிக் கொள்ளலாம். " உனது உண்மையான தன்மையை உணர்ந்து கொள்வாயாக. ஆன்மிக நூல்களில் உரைத்ததற்கு இணங்கச் செயலாற்றுவாயாக. அதாவது பயனை எதிர்பாராது பற்றின்றிக் கடமை ஆற்றுவாயாக". கிருஷ்ண பரமாத்மாவின் போதனைகளில் மனிதப் பிரச்சினைகளுக்கு ஒரு பூரணமான அணுகுமுறை இருக்கின்றது.

"வேலை செய்வதில் மட்டுமே உனக்கு உரிமை உண்டு. ஆனால் அவ்வேலையால் வரும் பயனை நீ உரிமை கோர முடியாது. யோகத்தில் நின்று கொண்டு உனது கடமைகளை நிறைவேற்றுவாயாக. பற்றை விடுத்து வெற்றி தோல்விகளால் பந்தமுறாது நிற்பது யோகமாகும். "

ஒழுக்கத்தில் இருந்து ஆன்மிகத்துக்குப் படிப்படியாக முன்னேறும் வழியைக் கீதை காட்டுகின்றது. மனிதன் பற்றற்ற நிலைக்கு முன்னேறும் ஒரு ஒழுக்க வாழ்க்கையை மேற்கொள்ளுவதற்குக் கீதை வழி காட்டுகின்றது. அந்த ஒழுக்கம் ஆன்மிக வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமானதாகும். ஆன்மிக வாழ்க்கைக்கு முக்கியமான ஒரு முன் நிபந்தனையும் உள்ளது. அதுவே புலன்களையும் மனத்தையும் கட்டுப்படுத்துவதாகும். அதன் மூலம் மனிதன் சுய ஒழுக்கம் இன்றி உயர்ந்த முயற்சிகளில் ஈடுபட முடியாது என்பதைக் கீதை வெளிச்சம் போட்டுச் சுட்டிக்காட்டுகின்றது.

ஜீவான்மாவின் இயல்பை ஆராய்வது கீதையின் பிரதான கருத்தாகக் காணப்படுகின்றது. பந்தத்தில் இருந்து மனிதனை விடுவிப்பது உண்மையான ஞானமாகும். கிருஷ்ணபரமாத்மாவின் போதனையின் அடிப்படை ஒருவன் தனது உண்மையான இயல்பை அதாவது ஆன்மாவை உணர்ந்து கொள்வது மட்டுமே. அதாவது பிரக்ஞ்ஞை, பேரானந்தம், என்றுமுள்ள தன்மை என்ற உண்மை ஆன்மாவின் இயல்பை அறிவதே மனிதனின் கவலைகளுக்கு ஒரு முடிவாக அமைகின்றது.

## 3. பற்றே கவலைகளைக் கொண்டு வருகிறது

ஒவ்வொரு மனிதனும் என்றோ ஒருநாள் தன்னைத் தானே கேட்க வேண்டிய ஒரு கேள்வி இருக்கின்றது. அதுதான் "எந்த மாதிரியான வாழ்க்கையை நான் வாழ்ந்து கொண்டு இருக்கின்றேன்; அது ஒரு நல்ல வாழ்க்கையா?" என்பது அறவாழ்க்கையை மேற்கொள்ளுவதற்கு ஆன்மிக நூல்களின் கருத்துக்களைச் சரியாக விளங்கிக் கொள்ள இந்த சுயபகுப்பாய்வு முன்நிபந்தனையாக அமைகின்றது. கேடுகள் அன்றி உண்மையே இறுதியில் எப்பொழுதும் வெல்லும் என்ற கருத்து மிகவும் உண்மையானது. எனினும் பலர் உண்மையை மூடி மறைக்கும் போக்கு உள்ளவர்களாகவே இருக்கின்றனர். நிலைமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழையாகப் போகும் பொழுது உண்மையை எதிர் கொள்ளாது மற்றையோரைக் குறை கூறுகின்றனர். பிரச்சினைகள் வரும்போது இதுதான் அவர்களது பிரதிச் செயலாக அமைகின்றது. எண்ணத் தூய்மை, உண்மைக்கு மாறாத நடத்தை என்பனவே விடுதலை அடைய முயற்சிக்கும் ஆர்வலர்கள் எடுக்க வேண்டிய முதல் நடவடிக்கைகள் ஆகும்.

சுயபற்று இறுதியில் கவலைகளையே கொண்டு வரும். ஒருமனிதன் வேலை செய்வதற்கான உரிமையை மட்டுமே தன்னகத்தே கொண்டிருக்கின்றான். அந்த வேலையின் பலன்களில் அவன் உரிமை கொண்டாட முடியாது. ஒரு மனிதன் இதற்காக மேற்கொள்ளக் கூடிய ஒரு சிறந்த வழி உண்டு. அது கடவுளைச் சேவிப்பதற்காக ஆன்மிக நூல்கள் நிர்ணயிக்கும் கடமைகளைச் செய்வதே; அத்துடன் வாழ்க்கையின் இன்பதுன்பங்களைச் சமமாக எடுத்துக் கொள்ளும் மன நிலையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். நிகழ்ச்சிகள் தமது வழியிலேயே ஏன் நிகழ்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள எப்பொழுதுமே சாத்தியமில்லை. எனினும் ஒருவன் கடவுளிடம் பூரணமாகச் சரணடையும் போது அவனுக்கு உதவக் கடவுள் என்றும் காத்திருக்கின்றார். ஒருவனைப் பிரச்சினைகள் தொந்தரவு செய்யும் வேளையில் அவன் மனத் தளர்ச்சியை அடையக் கூடாது. கடவுள் நம்பிக்கையினாலும் அவன் மீதுள்ள பக்தியினாலும் தனது பிரச்சினைகளின் ஆற்றல் மிகவும் குறைவடையும் என்பதை அவன் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒருவன் விழிப்புணர்வு அடையும் போது கடந்தகாலப் பிறவிகளில்தான் செலுத்த வேண்டிய கடன்களே அவை என்று உணர்ந்ததும் துன்பத்தின் மத்தியிலும் அமைதி வருவதைக் காணலாம்.

அமைதியான வாழ்க்கை என்பது ஒருவனது மகிழ்ச்சிகரமான மனநிலையே. அந்நிலை வெளியி லுள்ள எதனாலும் வருவதில்லை. அதனை ஒருவன் தன்னுள்ளே கண்டுகொள்ள வேண்டும். பணம், பொருள்கள், செல்வச் செழிப்பு, ஆடம்பர வாழ்க்கை என்பவற்றால் அம்மனநிலை எவனிடமும் தோன்றப் போவதில்லை.

இந்த மனநிலையை அடைவதற்கு ஒருவன் படிப்படியாக முன்னேற வேண்டும். அதற்கு அவன் புலன்களின் இச்சைப் படி நடவாது பற்றற்ற நிலையைப் பின்பற்ற வேண்டும்.

**4. கர்மத்தை விலக்க முடியாது**

விதி என்றால் என்ன? இதுவே வாழ்க்கையில் உள்ள நிலையான கேள்விகளுள் ஒன்று. விதி கடந்த பிறப் புக்களில் செய்தவற்றின் பயன் என்றால் இந்தப் பிறப்பில் ஒரு மனிதன் அதற்காக எதுவும் செய்ய முடியாதவனாக இருக்கின்றான் என்று முடிவு எடுக்க முடியுமா? விதிக்கும் முயற்சிக்கும் இடையே உள்ள விவாதம் நெடுங்காலமாகவே நிகழ்ந்து வருகின்றது. ஏனெனில் அவற்றுக்கு இடையே உள்ள தொடர்பு ஒன்றில் ஒன்று தங்கி இருப்பதினால் என்க. எமது பாபச் செயல்களோ அறச் செயல்களோ அவற்றின் பலன்களை நிர்ணயிப்பதால் இன்பங்களையும் துன்பங்களையும் நாம் அனுபவித்து வருகின்றோம். ஒருமனிதன் தனது செயல்களின் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொள்ள வேண்டும். அவனது முயற்சி களில் இருந்தே அப்பொறுப்புக்கள் அவனுக்கு வந்து சேர்கின்றன. ஓர் அறிஞர் நேற்றைய சுதந்திர சங்கல்பம் நாளைய விதி என்று கூறியிருக்கின்றார் என்பதை இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

காலம் தனது பாய்ச்சலில் திசை ஒன்றை மட்டும் பின்பற்றுவதில்லை. கடந்த காலத்தை எவரும் இன்றைக்குக் கொண்டு வர முடியாது. சமைத்த அரிசி காலவதியாகிப் பழையது ஆக மட்டுமே ஆகக்கூடும். அதேபோல, அதை மீண்டும் அரிசியாக்க ஒருபோதும் முடியாது. எமது கடந்த காலக் கர்மத்தை எவராலும் அழிக்க முடியாது. எனினும், விழிப்புணர்வோடு செயல்களைச் செய்ய முடியும். அப்படிச் செய்தால் ஒவ்வொரு பிறப்பிலும் நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் முன்னேற்றப் பாதையில் செல்லக் கூடியவாறு எம்மால் செய்ய முடியும். அதன் மூலம் அறவாழ்வை நாம் எமது குறிக்கோளாக வைத்துக் கொள்ள முடியும். இதனால் ஒவ்வொரு மனிதனும் அறத்தின் எல்லைகளுக்குள் தனது வாழ்வை மேற்கொள்ளவும் முடியும். ஆனால் அவ்வாறு செய்வது எப்பொழுதும் சாத்தியமாக இருப்பதில்லை. அது மட்டுமன்றித் தர்மத்தின் நுண்ணிய இயல்பை எவராலும் புரிந்து கொள்ள முடியும் என்று சொல்வதற்கும் இல்லை.

அற நடவடிக்கைகளுக்குள் நிற்க வேண்டிய தேவை எப்பொழுதும் இருக்கின்றது. பாவச் செயல்களின் விளைவுகளில் இருந்து எவராலும் தப்ப முடியாது. அவற்றால் மரணத்தைக் காட்டிலும் அதிக துன்பத் தைக் கூட அனுபவிக்க நேரிடலாம். அது ஒவ்வொரு செயலின் தன்மையையும் பொறுத்ததாகும்.

உணவை நாடிக் குதிரை ஓடுவது போல ஒரு மனிதன் அறத்தின்படி நடக்க முயல்வானாகில் அந்த அறமே அவனது வயோதிப காலத்தில் அவனைக் காப்பதற்கு ஓடிவரும். ஒரு மனிதன் வாழ்க்கையின் காரண காரிய இயல்பினால் கட்டுண்டவன் என்று அவனால் கூற முடியும். அத்துடன் நாளாந்த வாழ்வில் எப்போதும் அறவழியில் நடப்பது சாத்தியமில்லாது போகலாம். ஆன்மிக நூல்கள் வாழ்க்கையில் ஒரு வழியை முற்றாகக் கைவிட்டு அதற்குப் பதிலாக வேறொரு வழியை மட்டும் பின்பற்ற வேண்டும் என்று ஒருபோதும் போதிப்பதில்லை. அதற்கு மாறாக அவை காலத்துக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான செயல்களை விவேகத்தோடு மேற் கொள்ளவே மனிதர்களை ஊக்கப்படுத்துகின்றன.

### 5) புலன்களையும் மனத்தையும் கட்டுப்படுத்தல்

மனித வாழ்க்கையை அர்த்தமுள்ளது ஆக்கக் கூடிய மிக உயர்ந்த நலன் பற்றிய அறிவைப் பெறுவதற்கு மனிதர்கள் ஆன்மிக நூல்களின் பக்கம் திரும்ப வேண்டி உள்ளது. அவை பாவ வாழ்க்கைக்கும் அறவாழ்க்கைக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தையும் அவற்றால் வரும் பலன்களையும் வேறுபடுத்தும் தீர்மானம் எடுக்கும் ஆற்றலை மனிதருக்கு வழங்குகின்றன. ஒரு மனிதன் ஆன்மிக நூல்களில் இருந்து கற்றுக் கொண்ட அறிவைப் புலன் இன்பங்களை அடைவதற்குப் பயன்படுத்துவானாகில் அவன் பெற்ற அறிவு வெறும் விவேகப் பயிற்சிக்கானதாயே அமையும். ஓர் ஆன்மிக ஆர்வலனின் அடிப்படை முன்நிபந்தனை மனத்தைக் கட்டுப்படுத்துவதற்குக் கற்றுக் கொள் வதே. மனமானது ஆசைகள், பேராசைகள் , கோபம், வெறுப்பு என்பவற்றில் இருந்து விலகினால் மட்டுமே அந்த அடிப்படை முன்நிபந்தனையை நிறைவேற்றுவது சாத்தியமாகும். உலகியல் வாழ்வில் துன்பங்கள் இயல்பாகவே உள்ளன என்பதையும் ஒருமனிதன் புரிந்து கொள்ள வேண்டும். எனவே அவன் துன்பங்கள் வரும்போது மனக் கலக்கம் அடைவதோ மனத்தைரியத்தை இழப்பதோ பொருத்தமற்றது.

கடவுள் எங்கும் பரந்து நிறைந்து உள்ளார். ஆனால் உலகில் மனத்தின் ஈடுபாடு பொதுவாக ஓர் எல்லைக்குள் அடங்கியதாகவே இருக்கும். சுயகட்டுப்பாட்டினால் மனம் அமைதி அடையும் போது மனம் எல்லாவற்றையும் அறியக் கூடிய ஆற்றலை வளர்க்க முடியும். கண்ணாடி தனக்கு முன்னால் உள்ள பொருளைப் பிரதி பலிப்பது போல மனம் தான் நினைக்கும் பொருளைப் பீடித்துக் கொள்ளும் ஆற்றலுடையது ஆகின்றது. மனம் பரப்பிரமத்தை அது நாடும் ஆற்றல் உடையதாய் இருக்கும் போது அது தனது இயல்பைப் பெறுகின்றது. இதன் பின் மனம் தனது இயல்பிலேயே நிற்கும். பரப்பிரமத்தின் இயல்பு பேரானந்தம் ஆகையால் அதனில் நிற்கும் மனம் எவ்விதப் பிரச்சினைகளாலும் துன்பப்படப் போவதில்லை. அந்நிலையில் பிரச்சினைகள் மனதைப் பாதிக்கா.

புலன்களும் மனமும் முற்றாகக் கட்டுப்படுத்தப்படும் போது மட்டுமே ஆன்மாவைப் பற்றிக் கொள்ளச் சாத்திய மாகும். “மனம் அமைதி அடையும் போது எல்லாத் துன்பங்களுக்கும் முடிவு வருகின்றது” என்று கீதை கூறுகின்றது. அத்துடன் அமைதியான மனதுடைய ஒரு மனிதனது புத்தி மிக விரைவில் எல்லாப் பக்கங்களில் இருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டு கடவுளில் தன்னை உறுதியாக நிலை நாட்டிக் கொள்ளுகின்றது.

### 6. கீதையின் இன்றைய தேவை

மிகப் பிரசித்தி பெற்ற ஆன்மிக நூலான கீதை நாளாந்த வாழ்க்கைக்குப் பொருத்தமானதா அல்லது தினசரி ஓதுவதற்கு மட்டும் பொருந்துமா என்ற சந்தேகம் எழுவது இயல்பானதே. கீதை தெய்வத்தின் குரல் என்பதை மறப்பதனாலேயே அவ்வாறான சந்தேகம் எழுகின்றது. மனித வாழ்க்கைக்குச் சுவாசம் எப்படியோ அப்படியே தினசரி வாழ்க்கைக்கும் கீதை அத்தியாவசியமாகும். ஒரு மனிதனுக்கு அவனது நாளாந்த வாழ்க்கையில் கீதை பெறுமதி வாய்ந்த ஒரு செய்தியைக் கொண்டிருப்பதனால் அதனை வாசிக்கும் ஒரு மனிதன் ஒருபோதும் தனித்து உதவியின்றி விடப்படமாட்டான். கீதை கிருஷ்ண பகவானது பாடல். தனது அடியவன் ஒருபோதும் தனிமையில் துன்பப்பட மாட்டான் என்பதைக் கிருஷ்ண பரமாத்மா மிகத் தெளிவாகக் கீதையில் குறிப்பிட்டிருக்கின்றார். இறைவனது பாடல் என்பதனால் அது மனித மனத்துக்குத் திருப்தி அளிப்பதாக இருக்கின்றது. அதனால் தான் அதனை வாசிப்பவரின் இதயத்தினுள் அது இலகுவாகப் புகுந்து கொள்கிறது. ஆனால் வாய்ப் பேச்சானது மனத்தை மட்டுமே திருப்தி செய்வதோடு மனத்தின் எல்லைகளுக்குள் மட்டுமே நிற்க முடியும்.

இன்றைய மனித வாழ்வை அமைதியின்மை குடி கொண்டு விட்டது. இதனால் ஒருமனிதன் தனது குடும்ப அங்கத்தவர்களோடும், இயற்கையோடும் பொதுவாக தனது வாழ்க்கையோடும் இணக்கம் இல்லாதவனாக இருக்கின்றான். எனவே இந்த இணக்க மின்மை எப்பொழுது ஆரம்பித்தது என்று அறிய வேண்டிய தேவை அவனுக்கு அத்தியாவசியமானதாய் உள்ளது. அந்த அமைதியின்மைக்கான காரணம் என்ன, அதனை நீக்க என்ன செய்ய வேண்டும் என்பவற்றையும் அவன் அறிந்து கொள்ள வேண்டி உள்ளது. நிறைவேற்றப்படாத ஆசைகளே அமைதி யின்மைக்கான மூல காரணமாகும். இன்றைய மனிதன் அமைதியின்மையினால் கருணையில்லாதவனாக மாறிவிட்டான். அது மட்டுமன்றி மற்றவர்களுக்காக நேரம் ஒதுக்க முடியாதவனாகவும் அவன் மாறி விட்டான். அவற்றுக்குக் காரணம் அவனது கருணை என்ற பண்பை அவன் இழந்தமையே ஆகும். துரதிஷ்டவசமாகக் கல்வி மனிதனது நலன்களைப் பெறும் ஒரு கருவியாக மாறிவிட்டது. அவ்வாறான கல்வியின் விளைவாக மனிதன் தன்னை மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமாகக் கொண்டு வாழ ஆரம்பித்துவிட்டான். அவனிடம் தெய்வ நம்பிக்கையும் இல்லாமல் போய்விட்டது. அத்துடன் கடவுளும் தருமமும் ஒன்றாக இருப்பதனால் விழுமியங்களில் உள்ள நம்பிக்கையும் அவனைவிட்டு நீங்கிவிட்டது. பொறாமையும் மற்றவர்களுடன் மகிழ்ச்சியாக அளவளாவும் பண்புகளை இழந்தமையும் அந்த அமைதியின்மைக்கான ஏனைய காரணங்களாகும்.

அமைதியின்மையே கடமையிலிருந்து விலகக் காரண மாக அமைகின்றது. அது மனிதனின் மனநிலையின் அடையாளமாகவும் இருக்கின்றது. எனவே மன ஆராய்ச்சியே ஆன்மிக சாதனையின் இலக்காகவும் அமைகிறது. அந்தச் சாதனை மனதை அதன் இயல்பான நிலையில் இருந்து செயலாற்றும்படி கூறுகின்றது. எண்ணற்ற வாழ்க்கைகளின் விளைவாகவே நமக்கு இந்தப் பிறப்பு வாய்த்திருக்கின்றது.

இதனை ஒருவர் என்றும் மறவாமல் தனது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். எனவே மனிதன் இந்தச் சந்தர்ப்பத்தை ஒருபோதும் கைநழுவிப் போக விடக்கூடாது. மன அமைதியைக் கொண்டு வருவதே மனிதனின் இன்றைய நிலைக்கான தீர்வாக அமையும். ஒரு மனிதன் கீதையில் ஒரு சுலோகத்தை வாசித்து அதுபற்றி ஆழமாகச் சிந்திக்க முடிந்தால் கூட ஒவ்வொருநாளும் அருள்மழை பொழியும் நாளாக ஆகிவிடும்.

கீதை வாழ்க்கை பற்றிக் குறை கூறாது இருக்கக் கற்றுக் கொள்ள எமக்கு உதவுகிறது. வாழ்க்கை அது வருகின்ற படியே ஏற்றுக்கொள்ளவும் கீதை நமக்கு உதவுகின்றது. ஆன்மா என்றும் உள்ளது என்பதையும் உடல் மட்டுமே மரணிக்கிறது என்பதையும் கீதை உறுதி கூறுகின்றது. இதனை உணர்ந்து கொண்டால் பற்றற்ற தன்மையை அது முன்னேற்றும் பண்புடையதாக இருக்கும்.

**7) கடவுள் நம்பிக்கை மன அமைதியைத் தரும்**

மனித துன்பங்கள், அமைதியின்மை, பற்றாக் குறையா யுள்ள மன அமைதி என்பனவே மனிதன் கடவுளிடம் இருந்து வெகுதூரம் விலக மூல காரணமாகும். இறை வனோடு நிரந்தரமாகச் சேர்ந்திருப்பதற்குப் பதிலாக மனிதன் உலகத்தோடும் உலகப் பொருள்களோடும் பற்றுடையவனாக இருக்கின்றான். இப்பற்றுக்கள் தற்காலிகமானவையாகவும் அடிக்கடி மாறுகின்ற வைகளாகவும் உள்ளன. எனவே வாழ்வில் பிரச்சினைகள் வரும்போது அவன் மன அமைதியை இழக்கின்றான். இறைவனின் அடியவர்களைப் பொறுத்த வரையில் தமக்குப் பிரச்சினைகள் வரும்போது கடவுள் அவற்றுக் கான தீர்வை வைத்திருக்கின்றான் என்றும் தாம் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை என்றும் அறிந்து கொள்கின்றனர். இறைவன் எப்போதும் தன்னுட னேயே இருக்கின்றான் என்று ஒரு மனிதன் புரிந்து கொள்ளும் போதும் அறிந்து கொள்கின்ற போதும் அவன் கடவுளிடம் இருந்து வெகு தூரம் விலக்கி விடப்படமாட்டான். இந்த உண்மையை உணர்ந்து கொள்ளாவிட்டால் அவன் வாழ்வில் துன்பங்கள் நிறைந்தவனாகவே இருப்பான். குடும்பம், சமூகம், உலகம் என்பவற்றில் இன்று பெருமளவு அமைதி தேவைப்படுகின்றது என்பதும் ஒவ்வொருவரும் அதனைத் தேடுகிறார் என்பதும் வெளிப்படையாகவே தெரிகின்றது. ஆனால் தனக்கு வெளியிலே அமைதியை ஒருபோதும் பெறமுடியாது. அதனை அவன் தனக்குள் ளேயே கண்டுகொள்ள வேண்டும். அதற்கு ஆன்மிக நூல்கள் சரியான பாதையைக் காட்டுகின்றன. அவை அவன் மன அமைதியை மீளப் பெற உதவுகின்றன.

ஒரு மனிதன் தனது அமைதியை இழக்கும் நேரங்களை ஆராய வேண்டும். அப்போது தனக்கு மனக்குழப்பங்கள் இருக்கும்போதும் தனக்குத்தான் அந்நியமாயிருக்கும் நேரங்களின் போதும், வாழ்வில் பல பிரச்சினைகள் வந்து சூழுகின்ற போதும், வாழ்க்கையில் சரியான வழியில் செல்ல முடியாது திகைத்து நிற்கும் போதும் அவன் தனது அமைதியை இழக்கின்றான். மன அமைதி அறிவோடு சேர்ந்தே எப்போதும் வருகின்றது. கிருஷ்ண பரமாத்மாவே யாகத்தை ஏற்றுக்கொள்கின்றான் என்றும் தவத்தை ஏற்றுக் கொள்கின்றான் என்றும், எல்லா உலகங்களுக்கும் மேலான தலைவன் என்றும், எவரதும் நண்பன் என்றும் அறிபவன் என்றும், தனது உண்மையை அறிகின்ற அடியவர் அமைதியைப் பெறுகிறார் என்றும் கூறுகின்றார். “எதனை நீ செய்தாலும், எதனை உண்டாலும், யாகத்தில் நீ எதனை வழங்கினாலும் என்ன கொடையை வழங்கினாலும், எவ்வகையான தவத்தை நீ மேற்கொண்டாலும் எல்லாவற்றையும் எனக்கே அர்ப்பணி” என்று ஓரிடத்தில் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு ஆலோசனை கூறியிருக்கின்றான்.

மனிதன் பரமாத்மாவுக்கு நன்றி செலுத்தும் பொருட்டே யாகத்தை மேற்கொள்ள வேண்டும் என்பது மேற் போந்தவற்றினால் தெளிவாகின்றது. தான் அனுபவிக் கின்ற எல்லாவற்றையும் கடவுளுக்கு நன்றியை வெளிப் படுத்தும் ஒரு வழியாகும் என்று அவன் உணர வேண் டும். இதேபோல மற்றவர்களுக்கு வழங்கும் நன் கொடைகளும் தியாகங்களும் இறுதியில் இறை வனுக்குச் செலுத்தியனவே. எல்லோருக்கும் நண்பனாக உள்ள பரமாத்மா எல்லாவிதமான பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடிய ஆற்றல் உள்ளவர் என்ற உண்மையைப் புரிந்து கொள்பவன் அதன் விளைவாக மன அமைதி பெறுகிறான் என்பதையும் ஒரு சுலோகத்தில் கிருஷ்ணன் தெளிவுபடுத்தியிருக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 8) நாளாந்த வாழ்க்கைக்கான கையேடு

வேதாந்தத்தில் பெறக்கூடிய நலனை எந்தக் கல்வி நிறுவனமும் போதிப்பதில்லை. அதாவது வேதாந்தம் கூறும் வாழ்வின் முக்கிய படிப்பினையை எந்தக் கல்வி நிறுவனமும் போதிப்பதில்லை. இதிலிருந்து பின்வரும் ஒருவினா எழுகின்றது. ஆன்மிக நூல்களை ஒரு மனிதன் கற்பதனால் அவன் தனது வாழ்க்கையின் மிகச் சிறந்த பகுதியை இழந்து வாழ்க்கையின் பிற்பகுதியில் மட்டும் அறவாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்று கற்பதா? என்றதே அந்தக் கேள்வியாகும். கீதை வாழ்க்கையின் பிற்பகுதியில் மட்டும் கற்க வேண்டியது என்ற பொதுவாக உள்ள பிழையின் காரணமாகவே இந்த வினா எழுகின்றது. அர்ச்சுனன் மன அமைதியை இழந்தபோதும் எது சரியான கர்மம் என்பது பற்றிக் குழம்பியுள்ள போதும் அவனுக்குக் கீதை போதிக்கப்பட்டது. உறவினர்கள், நண்பர், குருமார் என்போரோடு போரிடும் சாத்தியத்தை எதிர் கொண்டபோது மிகப் பெரிய போர் வீரனான அர்ச்சுனன் செய்வதறியாது திகைத்து யுத்த களத்தில் நின்றான். தனது பயங்கள், சந்தேகங்கள், உணர்ச்சிக் கொந்தளிப்புகள் என்பவற்றை முற்றாக வெளியிடும்வரை கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு இடம் அளித்தான். அதன்பின்பே கிருஷ்ணன் அவனுக்குப் போதனை வழங்கினான். அதுவும் அவன் கிருஷ்ணனிடம் ஒரு மாணவனாகச் சரணடைந்த பின்பே தனது போதனையை கிருஷ்ணன் வழங்க ஆரம்பித்தான். "எதுமிகச் சிறந்த நன்மை பயக்கும் செயல்? நான் உனது சீடன், நான் என்னை உன்னிடம் அர்ப்பணிக்கின்றேன். எனக்குப் போதனை செய்" என்று அர்ச்சுனன் கேட்டிருந்தான் என்று கீதை கூறுகின்றது. போதனையை விரும்பி அதனைப் புரிந்து கொள்ளக் கூடிய ஒருவனுக்கே போதனை வழங்கப்பட வேண்டு மேயன்றி அதனை எல்லோருக்கும் வழங்க முடியாது.

ஒரு குறியீடான வாழ்க்கைச் சூழ்நிலையில் ஏதோ ஒன்று இருப்பதாக எண்ணிக் கொண்டு கீதையை நன்றாகப் புரிந்து கொள்ள முடியாது. போதனையின் இறுதியில் அர்ச்சுனன் பின்வருமாறு கூறுகின்றான்; "உனது அருளால் எனது மயக்கம் தீர்ந்தது. நான் ஞானத்தைப் பெற்றுள்ளேன். எனது எல்லாச் சந்தேகங்களும் தீர்ந்தன". வாழ்க்கையை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை அறிய அமைதியும் மகிழ்ச்சியும் உள்ள ஒரு மனநிலையிலேயே கீதையின் போதனைகளைக் கற்றுக் கொள்ளவேண்டும்.

### 9) கீதையின் பெருமை

கீதையின் புகழை வார்த்தைகளைக் கொண்டு விவரிக் கும் ஆற்றல் எவருக்கும் இல்லை என்றே கூற வேண்டும். உயர்ந்த மறைபொருள் நிறைந்த கொள்கைகளைக் கொண்ட ஒரு நூலாக இருப்பதனாலேயே அதனை எவராலும் விவரிக்க முடியாதிருக்கின்றது. கீதையோ வேதங்களின் சாரமாகக் திகழ்வது. எளிய, இனிய ஒரு மொழியினால் கீதை உரைக்கப்பட்டிருக்கின்றது. ஓரளவு பயிற்சி பெற்ற ஒரு மனிதன் மட்டுமே கீதையை இலகுவாகப் புரிந்து கொள்ள முடியம். கீதையின் வார்த்தைகள் மிக ஆழமான பொருள் கொண்டவை. ஒரு மனிதன் தனது வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியாகக் கற்று வந்தாலும் கூட அதன் அர்த்தங்களை முழுவதும் கற்று முடித்தவன் என்று கருதமுடியாது. கீதை தினமும் உண்மையின் புதிய புதிய பக்கங்களைக் காட்டக் கூடிய ஆற்றல் வாய்ந்தது. இதனாலேயே கீதை எப்போதும் புதியதாகவும் என்றும் முதல் முதல் படிப்பது போன்றும் இருக்கின்றது. நம்பிக்கையையும், விசுவாசத்தையும் வைத்துக் கொண்டு ஒன்றிய மனத்தோடு கீதையை ஆராய்ந்து வந்தால் அதில் பொதிந்துள்ள ஆழமான இரகசியங்கள் எல்லாம் தெளிவாகத் தோன்ற ஆரம்பிக்கும். கீதை விவரிக்கும் அறங்கள், அதன் புகழ், கடவுளின் இரகசியம் என்பவற்றை அது விவரிப்பதுபோல வேறு எந்த ஆன்மிக நூலாலும் கூறமுடியாது. ஏனைய ஆன்மிக நூல்களில் உலக மயமான கருத்துக்களும் கலந்தே இருக்கின்றன. ஆனால், கிருஷ்ணன் கீதையை மற்ற ஆன்மிக நூல்களைக் காட்டிலும் வித்தியாசமான ஒரு ஒப்பற்ற முறையில் அமைத்திருக்கின்றான். கீதையில் உள்ள வார்த்தைகளில் ஒன்றைக் கூட எடுத்துவிட்டு வேறொரு வார்த்தையை அந்த இடத்தில் வைக்க முடியாது. கீதையில் எந்த ஒருவார்த்தையும் ஆழமான அர்த்தத்தை வழங்காமல் இருக்காது.

விழுமியங்களின் அடிப்படையில் இலட்சிய வாழ்க்கை முறையை முன்னேற்றுவதற்கான ஒப்பற்ற ஒரு நூலே கீதை ஆகும். கிருஷ்ணன் வழங்கிய அவ்வாறான விழுமியங்களுள் ஒன்று நிஷ்காமிய கர்மமாகும். அதாவது அதுவே பலனை எதிர்பாராமல் செயல் புரிவதாகும். அதனை விருப்பு வெறுப்பின்றிக் கடமையைச் செய்வதென்றும் கூறலாம்.

இந்திய செவ்விலக்கியங்களுள் கீதை ஒன்றே பெரும் பாலான உலக மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றது. அம்மொழிகளில் 3000 இற்கும் மேலான பாஷியங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. சங்கரர், இராமானுஜர், மாதவர் ஆகிய மூன்று ஆச்சாரியர்களாலும் எழுதப்பட்ட பாஷியங்களே மிக உயர்ந்தன என்று எல்லோராலும் போற்றப்படுகின்றன. அவர்களைப் பின்பற்றி ஆனந்தகிரி, வேதாந்த தேசிகர், ஜயத்திரதர் முதலானோர் எழுதிய உரைகளும் குறிப்பிடக் கூடியவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேகாந்த காலமும் ஏகாந்த சித்தமும்

அண்மையில் சிவ யோகசுவாமிகளின் அன்பாளர்களில் ஒருவர் இயற்கை எய்தினார். அவர் சிறுவனாயிருக்கும் போதில் அவரது தந்தையாரின் கையைப் பிடித்துக் கொண்டு சென்று சுவாமிகளைத் தரிசித்தவர். இளைஞனாயிருக்கும் போது தனது கூட்டாளியுடன் கூடிச் சென்று சுவாமிகளைத் தரிசித்தார். தனியனாகச் சென்று தரிசித்ததும் உண்டு.

ஒரு நாள் சுவாமிகள் தமது காலுக்கு எண்ணெய் தடவி விடுமாறு அன்பர் அவர்களைப் பணித்தனர். அவர் சுவாமிகளின் காலைப் பிடித்து எண்ணெய் தடவிய கதையை எண்ணற்ற முறை தம் அன்பர்களிடம் கூறியிருக்கின்றார். ஒவ்வொரு முறையும் அவர் நினைவு புதுவதாகப் பூப்பது போன்றேயிருக்கும். சுவாமிகள் தாமாகத் தமது திருப்பாதத்தைத் தந்தனர் என அவர் எண்ணி எண்ணி இறும்பூதெய்துவார்.

சுவாமிகள் ஒருதருணம் அன்பாளரை ஒரு பாட்டுப் பாடுமாறு கூறினார். அன்பர் உடனே "சூரியன் வருவது யாராலே" எனத்தொடங்கும் பாடலை உற்சாகத்துடன் பாடலானார். பாட்டு முடிந்த இடத்தில் வேறு ஒரு பாட்டு உள்ளதை வேறுபடுத்தி அறியும் அறிவிலாத அந்த இளம் பருவத்தில் வேறு எனச் சொல்லி அந்தப் பாட்டையும் பாடலானார்.

**'அச்சம் ஒழியும் அவமிருத்துத் தானொழியும்**
**இச்சை ஒழியும் இடுக்கணொடு - பச்சைமலை**
**உச்சியினின் றாறொழு ஓங்கிலங்கை நன்னாட்டீர்**
**நித்தியரா மென்றுணர்வீர் நீர்'**

அன்பர் பாடிமுடித்ததும் சுவாமிகள் "நல்ல பாட்டு இது ஆர் பாடியது" என அன்பரிடம் கேட்டார். அன்பர் மிக்க குதூகலத்தோடு "சுவாமி நீங்கள்தான் பாடினீர்கள் நற்சிந்தனையில் உளது" எனச்சொன்னார். சுவாமிகள் பின்னென்ன "நித்தியராம் என்றுணர்வீர் நீர் இதற்கு மேல் என்ன இருக்கிறது" எனக் கூறினார். சுவாமிகள் கூறிய இச் சொற்களின் பொருளை முதுமை யடைய அடைய அன்பர் உணர்ந்துணர்ந்து மகிழ்ந்தார்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டவேளை. அன்பரது வீடு ஏரிக்கரையில் உளது. வாவி பெருகி வீட்டு மதிலைத் தள்ளி வீட்டில் வெள்ளம் பெருகியது. அப்போது அன்பர் மனைவியை ஒரு கையிலும் மகளை ஒரு கையிலுமாகப் பிடித்த வண்ணம் பின்பக்க மதிலை உடைத்து வெளியேறி உயிரைக் காப்பாற்றினார், அவருக்கு அவ்வாற்றலை அளித்தது, "அச்சம் ஒழியும் அவமிருந்துத் தானொழியும்" என்ற சுவாமி வாக்கே என்பதில் அவருக்கு அசையாத நம்பிக்கை இருந்தது.

சிவதொண்டன் இதழை ஆர்வமாக வாசிக்கும் அன்பர் களில் அவரும் ஒருவர். அதில் வரும் 'சுவாமி நினைவுகள்" முதலியன அவரது நினைவில் நிலைத் தவை. என் நெஞ்சில் இடங்கொண்ட ஒரு பெரியார் எனும் வைரமுத்து அவர்களின் நூல் அவரது நெஞ்சிலும் இடம் பிடித்திருந்தது. வைரமுத்து அவர்கள் முதன் முதலாக சுவாமிகளைத் தரிசிப்பதற்கெனக் காலைப் பொழுதில் சென்று படலையில் நின்றவேளை யில் சுவாமிகள் கொட்டிலில் இருந்த வண்ணம் 'வைரமுத்து' என்று பெயர் சொல்லிக் கூப்பிட்ட. குரலொலி எவ்வாறிருந்ததென நாமறியோம். ஆனால் அன்பர் அவர்களோ சுவாமிகளின் குரலை அருகிருந்து பல முறை கேட்டவர். சுவாமிகளின் அழைப்பு எவ்வாறி ருந்திருக்கும் என அவரால் உணர முடிந்திருக்கும். அன்பரது நெஞ்சில் இருக்கும் சுவாமிகள் என்புருகும் குரலால் 'வைரமுத்து' என்று அழைக்கின்றனரோ என எண்ணுமாறு அவர் வைரமுத்து எனச் சொல்வார். இதனால் சிவதொண்டன் நிலையத்தைச் சேர்ந்த தொண்டர்கள் அவரை வைரமுத்து எனச் செல்லமாக அழைப்பர்.

அவர் இறுதி நாள்களில் உணர்வற்றிருந்தனர் எனக் கூறுகின்றனர். ஆனால் இந்த நாட்களில்தான் அவர் ஒன்றிய மெய்யுணர்வில் இருந்தனர் எனத் தெரிகிறது. அவரது நெருங்கிய நண்பர்களில் ஒருவருடன் நேரம் போவது தெரியாமல் தொலைபேசியில் கதைப்பார். சுவாமி நினைவைப் பெருக்குவதற்கு அவரே அவருக்கு வாய்த்த ஆளாக இருந்தார். அந்த நண்பர் அன்பர் அவர்கள் உணர்வற்றிருந்த அந்தவேளையில் அவரருகில் இருந்து நற்சிந்தனை பாடினார். அவரது கண்கள் மூடி இருந்தன. கை கால்கள் அசையவில்லை. மூச்சு சளி அடைப்பி னூடே சிரமப்பட்டு வெளிவந்தது. சில நொடிகள் தமது மூச்சு ஓசை பாட்டோசைக்கு இடையூறாக இருக்காத வண்ணம் அதனை நிறுத்திக் கொண்டிருக்க முயன்றமையை அன்பரின் நண்பர் உணர்ந்தார். "நித்தியராமென்றுணர்வீர் நீர்" என்ற சுவாமி வாக்கு அவருக்கு அந்த நல்லுணர்வை நல்கியிருக்கும் போலும். சுவாமிகளின் அந்த வாக்குப் பொய்த்துப் போமோ? சாங்காலத்தில் ஒருவரின் நினைவு எவ்வாறு அமைகிறதோ அவர் அவ்வாறே ஆகிறார். குருபதத்தை நினைபவர் குருவின் திருவடியைச் சேர்கின்றார், குரு சாக்ஷாத் பரப்பிரமமேயாவார். அதனால் அவர் பரப்பிரம்மத்தையே சார்கின்றார். பகவத்கீதையிலே மேல்வருமாறு கூறப்பட்டிருக்கிறது.

**"இறுதிக் காலத்தில் எப்பொருளை நினைத்துக்**
**கொண்டு ஒருவன் உடலைப் பிரிகின்றானோ**
**எப்போதும் அப்பொருளை நினைப்பவனாகிய**
**அவன் அதையே அடைகின்றான்"** *(8-6)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆகையால் மனத்தையும் புத்தியையும் என்னிடத்து அர்ப்பணம் செய்தால் சந்தேகமின்றி என்னையே அடைவாய்" 8-7**

**முற்றும் உணர்ந்தவனை, தொன்மையானவனை, அனைத்தையும் ஆளுபவனை, அணுவிலும் நுண்ணியனை, அனைத்தையும் தாங்குபவனை, சிந்தனைக்கு எட்டாதவனை, கதிரவனைப் போன்று ஒளிர்பவனை, அஞ்ஞான இருளுக்கு அப்பாலுள்ளவனை பக்தியோடும், திட சித்தத்தோடும் யோகசக்தியுடனும் புருவமத்தியில் பிராணனை நிறுத்தி மரணகாலத்தில் எவன் நினைக்கிறானோ அவன் அத்திவ்விய பரமபுருடனை அடைகிறான். 8-9,10.**

ஆயின் மரணகாலத்திலே இந்நினைவு திடுமென வந்து நிற்றல் இயலுமானதா? உயிர் போகும் போது பொன்னும் பொருளும், போகமும், பெண்டிரும் மக்களும் பேரப்பிள்ளைகளும் என்னும் எண்ண அலைகள் எழும் ஒருவருக்கு உயிர்போம் பொழுது நற்சிந்தனையும் சிவசிந்தனையும் எவ்வாறு சாத்தியமாகும்? வாழ்நாளில் வலுவான சாதனை செய்தோர்க்கே இது சாத்தியமாகும். அன்பர் அவர்கள் எத்தொழிலைச் செய்தாலும், ஏதவத்தைப் பட்டாலும் கர்த்தன் திருவடிகள் காவல் என்பதை அறிந்தவர். அவர் நற்சிந்தனை படியாத நாள் இல்லை. நமது அருளாளர்கள் இறைவனை வழிபடாத நாளைப் பிறவாநாள் என்றும் இறைவனை மறந்த நாளை உயிர் போகும் நாள் உயர் பாடை மேல் போகும் நாள் என்றும் கருதியிருந்தனர். இக்கருத்தை அவர் தம் நெஞ்சில் பதித்திருந்தார்.

தமது வாழ்க்கை நாடகம் முடிவுக்கு வந்து கொண்டிருப்பது அவருக்கு நன்கு தெரிந்தது. காலன் எந்தக் கணத்திலும் வருவான். ஆனாலும் என்ன? சுவாமிகள் காலனை உதைத்தவர். சுவாமிகள் தாம் காலனை உதைத்த காரணம் பற்றிக் கூறியிருப்பதை அவர் அறிந்தவர்.

**"காலனை கோலிக் கருத்தினில் ஈசனை**
**மேலனை வீட்டில் வெளியாய்க் கண்டேன்**
**மாலணையாத மாட்சியைப் பெற்றேன்**
**காலனை உதைத்த காரணம் இதுவே "**

காலனை உதைத்த சுவாமிகளின் காலைப்பிடித்த அவருக்குக் காலனைப்பற்றிய கவலை ஏது? வீட்டார் அவரை வைத்தியசாலைக்கும் வீட்டுக்கும் இடையே ஏற்றி இறக்கித் திரிந்தார்கள், அவர்களுக்கு அது வேண்டியதே. ஆனால் அவருக்கு அது வேண்டியதாயிருக்கவில்லை. அவர் மாயும் உடலை மதிப்பவரல்லர். அவருக்கு வேண்டியது "நின்றும் இருந்தும் கிடந்தும் நினைவதொன்றே. ஒன்றிய நினைவொன்றே அவர் செய்ய வேண்டியது. அதுவே அவரைச் சுவாமிகளுடன் கூடியிருக்கச்செய்யும். அவர் இப்பொழுது நற்சிந்தனையைத் தமது தலைமாட்டில் வைத்துக் கொண்டார். வேண்டும் போது விரித்துப் படிப்பார். பின் அச் சிந்தனையிலே மூழ்கி விடுவார். இறுதி நாட்களிலே அவரது நெஞ்சிற் பதிந்த இரு நற்சிந்தனைப் பாடல்கள் பற்றி அவர் தம் நண்பரிடம் கூறியிருந்தார். அவர் கூறியதிலிருந்து நண்பரது உளத்தில் மேல்வருமாறான எண்ணம் ஏற்பட்டிருந்தது. அவர் ஒரு போது நற்சிந்தனையை விரிக்க மேல்வரும் பாடல் தென்பட்டது.

**"சென்றன சென்றன வாழ்நாள் அனைத்தும்**
**குன்றின குன்றின செல்வமும் இளமையும்**
**ஒன்றிய வகையால் உஞற்றுக அறனைக்**
**கன்றிய காலன் கணத்தினில் வருவான்**
**ஆதலின் நின்றும் இருந்தும் கிடந்தும் நினைமின்**
**பொன்றும் உடலைப் போற்றுதல் ஒழிமின்**
**நன்று தீதெனும் நாட்டம் விடுமின்**
**அன்றும் இன்றும் என்றும் ஆன்மா**
**இருந்தபடியே இருக்கும் சீரை**
**அருந்தவ யோகர் அறிந்தாங்கறிந்து"**

இந்த நேரத்துக்கு இது தக்க நற்சிந்தனை. சுவாமிகள் தக்க நேரத்தில் தக்க சிந்தனையைத் தந்துள் ளார் என்ற நினைவில் அந்த நற்சிந்தனையை மற்றொரு நினைவுமின்றி நீள நினைத்திருந்தார். இன்னொரு சமயம் புத்தகத்தை விரிக்க

**பல்லவி**

மாமயில் ஏறி வா- வா

**அநுபல்லவி**

கோமானே குழந்தை வேலா
சீமானே திருவடி தஞ்சம்
காமாந்த காரம் அகலவும்
நாமெந்த நேரமும் புகழவும் - மாமயில்

ஏகாந்த சித்தம் பெறவும்
யோகாந்த மார்க்கம் உறவும்
தேகாந்த காலம் தன்னில்
நீ போந்து காத்திடல் வேண்டும் - மாமயில்

எனும் பாடல் வந்தது. அவர் நல்லூரானையும் சுவாமிகளையும் ஒருவராகவே நினையும் நல்ல நினைவினர். இப்பொழுது சுவாமிகள் நல்லூரான் வடிவில் மாமயில் ஏறி வருவதாக நினைந்தார். இந்த இனிய கீதம் அவர் நெஞ்சில் இனிதாய் இசைத்த வண்ணம் இருந்தது. அவர் காலன் கைக்குட்படுபவரல்லர். மாமயில் ஏறி வந்து நிற்கும் கோமானின் குமாரர் அவர். அவர் குழந்தை வேலனின் பாலன். அவர் சேவடியே தஞ்சம் என்று இருந்திருப்பார். அவரது நினைவு ஏகாந்தமாயிருந்திருக்கும். அவர் தேக ஆட்டம் முடிவுறும் வேளையில் சுவாமிகள் அவர் திருமுன்பு இருந்து திருப்பாதத்தைக் காட்டியிருப்பார். அவர் பாதத்தை தடவிய வண்ணம் பாடி ஆடிப் பாக்கியனாயிருப்பார்.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரி

முன்னொரு கற்ப இறுதியிலே, பிரமதேவர் முதலிய பிரபஞ்சம் அனைத்தும் சிவத்தில் ஒடுங்க, அவ்விரவிலே உமாதேவியார் சிவபெருமானை வேதாகம விதிப்படி நான்கு யாமமும் அருச்சித்து அவ்விரவு புலர்ந்த பின் அப்பெருமானை இறைஞ்சி "யான் வழிபட்ட இவ்விரவு சிவநிசி என வழங்கவும் இந்நிசியிலே நான்கு யாமமும் பூசை புரிந்தவர் முத்தியெய்தவும் அருள வேண்டும்" என வேண்டி வரம்பெற்றனர். இதுவே "சிவராத்திரி வரலாறு" என்பர்.

அது அன்றியும் மற்றொரு கற்ப இறுதியிலே பிரளய வெள்ளத்துள் ஆழ்ந்த உலகைத் திருமால் வராக உருக்கொண்டு தூக்கி நிறுவி, மேருவாதிய மலைகளை அதற்கு ஆதாரமாக நாட்டி பின்னர் தமது நாபிக்கமலத்து உதிப்பித்த பிரம தேவருக்கு உலகைப் படைக்குமாறு பணித்து, தாம் திருப்பாற் கடலையடைந்து அறிதுயில் அமர்ந்திருக்க, அப்பிரம தேவர் முன்போல யாவும் படைத்துத் தாமே இறைவர் எனத் தருக்கித் தம்மால் ஆக்கப்பட்ட அனைத்தையும் நாடி வருங்கால், அத்திருப்பாற் கடலை எய்தி, அங்குள்ள திருமாலை எழுப்பி நீ யாவன் என வினவினார். அவர் யானே யாவும் நல்கும் பரம்பொருள் எனலும், பிரமதேவர் யாவும் நல்கும் பரம்பொருள் யானேயாக நீ இங்ஙனம் இசைப் பது ஏன்? எனக் கலாம் விளைத்தனர். இவ்வாறு இருவரும் எதிர்த்து அஸ்திர சாஸ்திரங்களால் போர் புரியுங்கால் இருவர்க்கும் இறுதி எய்தாவாறு இடையே சிவபெருமான் அனல்திரட்சி வடிவமாய்ச் சிவலிங்க உருக்கொண்டு திகழ்ந்தனர். திகழ்ந்த அவ் விலிங்கோற்பவ காலம் ஆகிய அம்மாசிமாத அபர பக்கச் சதுர்த்தசியோடு கூடிய நடு இரவே சிவராத்திரி எனப்பட்டது. பின்னர் அவ்விருவரும் அச்சோதிலிங்க ரூப வடிவின் அடிமுடி காண்பான் தொடங்கி இயலாமையின் மீண்டு அப்பெருமானை வழிபட்டு, அக்கடவுள் அருளியவாறே ஆதியில் அம்பிகை நோற்ற அந்நிசி விரதத்தைத் தாமும் நோற்றல் உடை. யராய் நாலுயாமமும் பூசித்து, வரம் பெற்றுத் தேவி மார்களோடு தம் பதவிகளை அடைந்து வாழ்ந்து இன்புற்றனர் என்பதும் ஒன்று. இவ்விரு சரிதமும் வேதாகம புராண சித்தமே.

இச் சிவராத்திரி மகா சிவராத்திரி, மாத சிவராத்திரி, பக்க சிவராத்திரி,வார சிவராத்திரி, நித்ய சிவராத்திரி என ஐவகைப்படும்.

ஆகையால் மாசி மாதம் அபர பட்ச சதுர்த்தசி திதியில் சூரியோதய காலத்தில் நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துச் சிவத்தியானத்துடன் அன்று பகல் முழுவதும் உபவாசம் இருந்து இராத்திரி நான்கு யாமத்திலும் நித்திரையில்லாமல் சிவபூசை செய்ய வேண்டும்.

சிவபூசையில்லாதவர்கள் ஆலயத்துக்குச் சென்று பரம சிவத்துக்கு அபிஷேக முதலானவைகள் செய்வித்துத் தரிசனம் பண்ணி மறுநாள் உதயமானவுடன் நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு சிவ தரிசனம் செய்து வந்து பாரணம் செய்ய வேண்டும். சிவராத்திரி தினம் இரவு பதினாறு நாளிகைக்கு மேல் ஒரு முகூர்த்தம் இலிங்கோற்பவ காலமாக விதிக் கப்பட்டிருப்பதனால் அந்தக் காலத்தில் அவசியம் சிவதரிசனம் செய்ய வேண்டும். சிவராத்திரி தினத்தில் பரார்த்த பூசையாவது ஆன்மார்த்த பூசையாவது தங்கள் தங்கள் நியமப் பிரகாரம் நடத்த வேண்டியது.

முதலாவது காலம் - அபிஷேகம் பஞ்சகௌவியம், வஸ்திரம் செம்பட்டு, பத்திரம் வில்வம், கந்தம் பச்சைக் கர்ப்பூரம் சேர்ந்த சந்தனம், நிவேதனம் பாற் பொங்கல், தூபம், சாம்பிராணி, சந்தனக் கட்டை, தீபம் புட்பதீபம்.

இரண்டாவது காலம் - அபிஷேகம் பஞ்சாமிர்தம், வஸ்திரம் மஞ்சள் பட்டு, பத்திரம் குருந்தை, கந்தம் அகிற் சந்தனம், நிவேதனம் பாயாசன்னம், தூபம் குங்குமம், தீபம் நக்ஷத்திர தீபம்

மூன்றாவது காலம் - அபிஷேகம் பலோதகம், வஸ்திரம் வெண்பட்டு, பத்திரம் கிளுவை, விளா, கந்தம் கஸ்த் தூரி சேர்ந்த சந்தனம், நிவேதனம் எள்ளோதனம். தூபம் கருங் குங்குலியம், தீபம் ஐந்து முக தீபம்.

நாலாவது காலம்- அபிஷேகம் கந்தோகம், வஸ்திரம் நீலப்பட்டு, பத்திரம் கருநொச்சி, கந்தம் புனுகு சேர்ந்த சந்தனம், நிவேதனம், சுத்தான்னம், தூபம் கர்ப்பூரம் லவங்கம், தீபம் வில்லார்த்தி.

மேலெழுதிய நான்கு கால பூசைகளுக்கும் விதித்தி ருக்கின்ற திரவியங்களோடு யதாவிதியான அபிஷே கம் முதலானவைகளும் பத்திர புஷ்பங்களும் சித்தி ரான்னங்களும் அருச்சனைகளும் சோடோபசார தீபாராதனைகளும் நடத்த வேண்டும். இந்த நான்கு கால பூசைகளும் மகாலிங்க மூர்த்திக்கு அஷ்ட புஷ்ப பூர்வமாக நடத்த வேண்டும்.

இந்த மகாசிவராத்திரி விரதத்தைக் கிருதயுகத்தில் விநாயகமூர்த்தியும், திரேதாயுகத்தில் ஷண்முக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தியும், துவாபரயுகத்தில் பிரமதேவரும், கலியுகத்தில் விஷ்ணுமூர்த்தியும் அனுஷ்டித்ததாக வாதுள முதலிய ஆகமங்களிலும் காலோத்தர முதலிய உபாகமங்களிலும் பௌஷியோத்தர முதலிய புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்வருடம் இச்சிவராத்திரி தினம் மாசி மாதம் 25ம் திகதி வெள்ளிக்கிழமை (08.03.2024ல்) வருகின்றது.

முன்னொரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையில் பெரும் போர் நிகழ்ந்தது. அப்போரில் சர்வ வல்லவனாகிய பரம்பொருளின் துணையினால் தேவர்களே வெற்றி பெற்றனர். வெற்றி வெறியில் தேவர்கள் தங்களுக்கு மேலாக ஒரு பரம்பொருள் இலர் என்று தருக்கிக் கொண்டனர். இவர்களின் தருக்கையறுத்துப் புத்தி புகட்ட எண்ணிப் பரம்பொருள் அவர்களின் முன்பு ஒரு இயக்க வடிவத்தில் தோன்றினார். இப்படிப் புதிதாகத் தமக்கு முன் தோன்றியிருக்கின்ற பேருருவத்தை யார் எனக் கண்டறியும் வண்ணம் அக்கினிதேவன் அனுப்பப்பட்டான். அக்கினி தன் வல்லபம் முழுவதையும் காட்டிச் சூழலெல்லாம் வேகும்படி அப்பரம வடிவின் முன் சென்றபோது பரம்பொருள் துரும்பு ஒன்றை அக்கினியின் முன் இட்டு "எரிக்க முடியுமானால் எரிப்பாயாக" என்றனர். அக்கினி தன்னால் இயன்ற மட்டும் முயற்சித்தும் எரிக்க முடியாது திகைத்தது. வெட்கத்தினால் தலை கவிழ்ந்து கொண்டு சென்று மற்றும் தேவர்களுக்கும் இதனைக் கூறியது. வாயு பகவானையும் அந்தப் பரம வடிவத்தின் முன் அனுப்பினர். அவரும் தன்னாற்றல் குன்றியிருத்தலை உணர்ந்து மீண்டனர். இவ்வாறு அக்கினியும் வாயுவும் தோற்றதைக் கண்ணுற்ற இந்திரன் எவ்வாறாயினும் அப்பரம வடிவத்தை அறிவேன் எனத் துணிந்து சென்றனன். இந்திரனுக்கு இருந்த தருக்கையழிக்க எண்ணிய பரம்பொருள் அவனுடன் கதை கூடப் பேசாது மறைந்து விட்டனர். தன்னால் அவ்வடிவினைக் காணக் கூட முடியவில்லையே என்று வெட்கமுற்ற இந்திரன் மனமாற்றம் எய்தித் தன் சிறுமையை உணரத் தொடங்கியதும் அப்பரம்பொருள் மறைந்த இடத்திலே அழகே வடிவமாய்த் தோன்றிய உமாதேவியாரைக் கண்ணுற்றனன். ஞானத்தின் திருவுருவே உமாதேவியாகும். உமா தேவியைக் கண்ணுற்ற இந்திரன் அவரை விளித்து "எனது காட்சிக்கும் எட்டாது மறைந்த அப்பரம்பொருள் யார்?" என்று வினவினான். உங்கள் வெற்றிகளுக்கெல்லாம் மூல காரணமாகவிருந்த பரம்பொருளே அவர். உங்கள் அறியாமையால் நீங்கள் செருக்குற்றீர்கள். அச் செருக்கினை அகற்றவே அப்பெருமான் இப்பெரு வடிவில் சோதியாகத் தோன்றினார்" என்றனர். இந்திரன் அறிவு மீண்டது. அப்பரம்பொருளே எல்லாவற்றிற்கும் மூலகாரணமானது என்பதை உணர்ந்தான்.

இக்கதையிலிருந்து இப்படி அறிவுடைய தேவர் கூட ஆணவமுறுகின்றபோது பட்டம் பதவிகளைப் பெற்ற அற்ப மானிடர்கள் எவ்வாறு மயக்கம் உறுவர் என்பதை யாம் அறியக் கூடும். அகங்காரமே அறிவினை அடைய விடாது தடுக்கும் பொருள். எவனொருவனுக்கு யான் எனது என்னும் இரண்டும் நீங்குகின்றனவோ அப்போது அவன் திருவடி தரிசனம் பெறுகிறான். கல்வி அறிவும் பொருட் செல்வமும் பரம்பொருளை ஒருபோதும் காணமாட்டா. அறிவே பிரமன், பொருளே விஷ்ணு. இவ்விருவரும் அடிமுடி தேடிப் பட்ட கஷ்டமும் பின் எம்பெருமான் சோதி வடிவாய் அவர்களுக்குக் காட்சி கொடுத்ததும் ஈண்டு உய்த்துணற்பாலதே.

சிவராத்திரி தினத்தில் இந்த அறிவினை அகத்திற் பதித்து ஆண்டவன் திருவடிப்பேறு பெறுவீர்களாக.

## எங்கும் என்றும் ஈசன் ஒருவனே உண்மையானவன்

எமதுள்ளும் புறம்பும் வியாபித்திருப்பவர் கடவுளே. மேலும் கீழும் காட்டிலும் நாட்டிலும் இங்கும் அங்கும் எங்கும் இரவும் பகலும் காலையும் மாலையும் அன்றும் இன்றும் என்றும் எம்முடனுறைபவர் கடவுளே. உருவமும் அருவுருவமும் அருவமும் ஆக உள்ளனவெல்லாம் அவரே. இத்தேகத்தில் நிலைத்திருக்கும் காலத்தில் செய்வன எல்லாம் அவரது திருவிளையாட்டுக்களே. செய்கையும், செய்பவனும் கடவுளேயாகும். யோகமும், போக்கியமும் அவரே. இறைவன் சங்கற்பத்தின் ஒரு துளியே நாம். அச்சங்கற்பம் முடிவெய்தியதும் யாமும் மறைகிறோம். தோன்றிய எல்லாம் மறைந்தேவிடும். ஆயினும் என்றும் மாறாத, யாவற்றிற்கும் மூலமான இறைவன் ஒரு கணமேனும் இல்லாமல் போவதில்லை. அவருக்குத் துவக்கமும் முடிவும் தொடர்புமே கூட இல்லை. ஏனெனில் என்றும் எங்கும் எல்லாம் அவரே. இதுவே பரம இரகசியம். இதுவே சத்தியம். இச்சத்தியமே நித்தியமும் இரகசியமும் பரிசுத்தமும் ஆகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமிமாரின் வியாபகம்

அஞ்ஞானத்துயில் நீத்து, உலகப் பற்றெனும் மருள் மாய்த்து தான் யார் என்பதை அனுபூதியில் அறியும்வரை தாமதிக்காமல் முயற்சியில் ஈடுபட்டி ருப்பவரே சாமி அல்லது சாதுவாவார். இவர்களைத் தொண்டர், சந்நியாசிகள் என்னும் பெயர்களாலும் அழைக்கலாம். இவர்கள் உலகில் எந்த நாட்டிலாயினும் சமூகத்திலாயினும், சாதியிலாயினும் சமயத்திலாயினும் தோன்றலாம். அதனாற் பாதகமொன்றுமில்லை.

காவியுடுத்தலும், தாழ்சடை விடுதலும், காடுகள் புக்குத்திரிதலும், மட்டுமே சாதுக்களுக்கு இலக்கணங் களாகா. கோவணம் கட்டி, யோக தண்டம் மட் டும் கொண்டு திரிபவரும் சாமியாகார். தண்டு கமண்டலமும், கால் கட்டை, நீற்றுப் பூச்சுக்களும் தோலாசனமும் உடையவர்களும் சாமிகளாகார்.

கண்ட கண்ட இடமெல்லாம் பிச்சை வாங்கியுண்டு கொண்டு நித்தியவஸ்துவின் ஐயமுறுதலிலும், துன் பத்தில் துடித்தலிலும், இன்பத்தில் இறுமாப்புக் கொள்வதிலும், ஒழுக்கத்தைக் கடைப்பிடியாமலும், மற்றவர்களையோ அவர்கள் கொள்கைகளையோ என்றும் குறை கூறுவதிலும், கண்டித்தலிலும், வீண் வம்பளப்பதிலும் தம் காலத்தை வீணே கழித்துச் சுகிப்பவர் சாமிகளாகார்.

மண்ணுயிர்க்கு நன்மை செய்தலே அறம். பிறவுயிர் களை இம்சித்தலே பாவம். பயமின்மையும் பலமுமே அறம். பயமும் பலவீனமுமே பாவம். சுதந்தர வாழ்வே அறவாழ்வு. அடிமை வாழ்வே மறவாழ்வு. மற்றவர்களை நேசித்தலே நல்லறம். பகைத்தலே பாவம். தன்னம்பிக்கையும் தெய்வ நம்பிக்கையும் தான் அறம். ஐயம் என்றும் மறம். மற்றும் எல்லாம் ஒன்றென வெண்ணல் இன்பம். எல்லாம் வேறு வேறாகுமென வெண்ணல் துன்பம். இப்பண்புகளையுடையவர்களே சாமிகளாவர். சாமிக்கு இவ்வுலகில் ஒரு பொல்லாப்புமில்லை. எதனையாவது வெறுத்தோ விலக்கியோ விடுவாராயின் அது அவரது வஞ்சகத்தையும், பேடித்தனத்தையும் பொய் வாழ்வினையும் சுயநல விருப்பத்தையும் வெளிக் காட்டும்.

பெரியோர்கள் அனுபவித்துக் கண்ட கூற்றுக்களைச் சிறுபிள்ளைத்தனமாக மறுத்துக் கூறாமலும் முதியோர் உரைகளை மேலெழுந்தவாரியாகப் பார்த்து நகைக்காமலும் ஞானத்தையும், எளியவாழ்வுடை யோரையும் இகழாமலும், ஆழ்ந்தவறிவுடையோரைக் குத்துரைகளால் குறை கூறாமலும், கட்டுப்பாட்டினை உடைக்காமலும், முரட்டுத்தன்மையைப் பேணாம லும், ஒழுக்கவீனங்களையும், வம்புக் குணங்களையும் மற்றவர்களுக்குக் கற்பிக்காமலும், குழப்படிகளுக்கும் கொள்கையற்ற வாழ்வுக்கும் எவ்விதத்திலும் உதவா மலும் வாழ்பவர்களே சாமிகளாவர். வஞ்சகம், பொறாமை, அழுக்காறு, அவா, வெகுளி, காமம் ஆதியாம் இழிகுணங்களில் ஈடுபடாமலும் ஈடுபடு வோரை இன்னுரையால் தடுத்தும். என்றும் நன்மை யில் அசையாத உறுதியுடையராயும் சமூகத்தில் என்றும் எடுத்துக்காட்டான மக்களாக வாழ்பவரே சாமிகள்.

ஒவ்வொரு ஆன்மாவும் தெய்வீகமானதென்றும் அகத்தும் புறத்தும் எழும் இயற்கை எண்ணங்களை அடக்கி ஆன்ம பரிபக்குவம் எய்தி மலர்ந்து எல்லா வற்றையும் தன்னிலும் தன்னில் எல்லாவற்றையும் காண்டலே கைவல்யமென்றும் வாழ்பவர் சாமிகள். இந்நிலையைத் தொண்டினாலேனும், தொழுகை யினாலேனும், தத்துவ ஆராய்ச்சியாலேனும் புலனடக் கத்தாலும் அன்றேல் எல்லாவற்றாலேனும் எய்துதலே சமயநெறி. சமயக் கிரியைகளும், சாஸ்திரங்களும், கோவில்களும் ஏனைய அனுஷ்டானங்களும் இதற்கு உதவியாகுமேயன்றி வேறன்று.

தன்னுயிர்போக நேரினும், எத்தனையோ பிறப்புக் கள் எடுக்க வேண்டிவரினும் ஒழுக்கத்தைக் கடைப் பிடிப்பாரன்றி எஞ்ஞான்றும் இழிகுணங்களுக்கு இடங் கொடுக்கமாட்டார்கள். புகழ்பெறவோ, பொருள் பெறவோ தம் ஒழுக்கத்தினின்றும் சற்றேனும் தளரார்கள். அமிழ்தம் கிடையாது விட்டால் அதற் குப் பதிலாக நஞ்சுண்பாரும் உண்டோ கொல்? தம்மாலியன்றளவு விழிப்பாகவிருந்து எஞ்ஞான்றும் சத்தியநெறியையே கடைப்பிடிப்பர்.

உறுதியும், உண்மையும், உற்சாகமும் கொண்டு என்றும் சிரத்தையுடையராய், பொறுமையுடையராய், விடாமுயற்சியுடன் தொழிலாற்றுபவரே சாமிகள். சக்தியின் சின்னமாய், நற்சிந்தனையுடையராய் என்றும் ஆக்கவேலைகளிலும் உன்னத லட்சியங்களிலுமே நாட்டமுடையராவர்.

மனிதனின் புனிதத் தன்மையை அல்லது தெய்வீகத்தை இகழும் எந்தக் கொள்கையாவது தத்துவத்தையாவது இவர்கள் அங்கீகரிக்கமாட்டார்கள். எவ்வித ஆடம்பர முடையதாயினும், எவ்வித சிறப்புக்கள் பொருந்தியனவாயினும் மனிதனை அணுவாக்கும் கிரியைகளையும் ஆசாரங்களையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளார். பல காலத்துக்கு முன்பிருந்தே பழக்கத்தில் வந்ததாயினும் எத்துணை மேம்பாடுளதாயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு மேலான போதனைகள் பொலிந்தன வாயினும் மனிதன் மாண்பைப் பலியிடும் எவ்வித சமூகவொழுங்கையும் துரும்பென மதிப்பார்கள். சீவனே சிவன் என்ற சித்தாந்தம் உடையராகையால் அதனினும் மேலானவோர் கொள்கையோ போதனையோ இவ்வுலகில் இல்லையென்பதே அவர்கள் கொள்ளும் நெறியாகும். அழிவுச் சக்திகளில் நம்பிக்கையற்றவராய் எஞ்ஞான்றும் ஆக்க வேலைகளிலேயே ஈடுபடுவார் கள். கல்விப்போதனை, சமயபோதனை ஆகிய யாவும் மனிதனை உடல், உளம், ஆன்மா ஆகிய மூன்றினதும் வளம்படுதலிலேயே கருத்தூன்றும். உடலினதும், உள்ளத்தினதும், ஆன்மா வினதும் வளர்ச்சியைத் தடைப்படுத்துவதை இவர்கள் நஞ்சென விலக்குவர்.

தியாகத் துணிவும், செயலாற்றுவதில் தீரமும், செயல் யாவற்றிலும் ஆண்மைப் பொலிவும் உடையவர்களே சாமிகள். இவர்கள் தம்மகத்துள்ள தெய்வீகம் மலருவ தற்காக அன்புப் புரட்சியாளர்களாவும் முன்னேறும் ஒவ்வொருபடியும் புனிதமுடையதாகவும், செய்வன யாவும் செவ்வனே செய்பவர்களாகவுமே காண்பர். அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு, சிறியனவென்று சில வற்றை அசட்டை செய்து காரியமாற்றுவது இவர்கள் சுபாவமல்ல. அதனால் சோம்பேறிகளைப் போலத் தூங்கிக் கொண்டிருப்பவரும் அல்லர். இடைவிடாத் தியானத்தில் என்றும் விழிப்பாகவே இருப்பர். சனமருள், சாஸ்திரமருள் முதலாயவற்றில் மயங்கார். தமது ஒவ்வொரு அணுவும் புனிதமடைவதிலேயே சதா தனித்தும் விழித்தும் இருப்பர். நண்பர் கூட்டம் பெருகினும் அருகினும் ஏற்றத்தாழ்வு அடையார். தமது மௌனமான படாடோப மற்ற புனித வாழ்விலேயே சமுதாயத்தின் புனிதம் அல்லது தூய்மை ஆரம்பிக்கின்றது என்பதில் அசையாத நம்பிக்கை வைத்திருப்பார்கள். இதையே சமூக ஒற்றுமை, தெளிவு, நன்மை, சமாதானம், விழிப்பு ஆகியவற்றின் அடித்தளமாகக் கொள்வர்.

பகுத்தறிவுடையராய், நியாயாநியாயங்களைத் தீர ஆராய்ந்து தெளியும் ஆற்றலுடையராய், வெறி கொள்ளாதவராய், முரட்டுப் பிடிவாதமற்றவராய், பண்டைய பண்பில் அநுபவவுறுதியுடையவராய், நவீனமான சக்திகளைத் தமக்குச் சாதகமாக்க வல்ல வராய், அவற்றுடன் அள்ளுப்பட்டுச் சென்று வாழும் சிறுபிள்ளைத்தனமற்றவராய், என்றும் ஓர் உன்னத இலட்சிய வாழ்க்கையுடையவராய், தீர ராய், பதட்டமற்றவராய், ஒழுக்க சீலராய், மூட பக்தியற்றவராய், இடரினும் தளரினும் சமபுத்தி யுடையராய் வாழ்பவர்களே சாமிகள். மலைபோன்ற அசையாத உறுதியுடையராயினும் தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பது போன்ற முரட்டுப் பிடிவாதம் அற்றவராயும் இருப்பர். எதனையும் தீர விசாரித்தறியும் திறமையுடன் அன்பு செறிந்த பண்புடையராகவும் மிளிர்வர். எதனைப் பேணினும் முகமன் பாராமலும், உள்ளே ஒளிக்காமலும், வெளிப்படையாகவும் அன்பாகவும் கூறுவர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதலை இவர்கள் கனவிலும் கருதார். கண்டொன்றும் கூறார். தமக்குமட்டும் இரகசியமாகவுள்ளதென்று எதனையும் மறைத்துக் கொள்ளார். உண்மைக்கு உலகில் உள்ள யாவரும் உரித்துடையர் என்றும், உண்மை குறிக்கப்பட்ட சிலருக்கோ அல்லது சில சமயங்களுக்கோ அல்லது சில நாடுகளுக்கோ அல்லது சில காலத்திற்கோதான் சிறப்புரிமையாகாது என்றும் கொள்வது இவர்கள் சித்தாந்தம். ஆகவே உலகின் கண்ணுள்ள எல்லா மதங்களையும் மதசாரியர்களையும் நடுநின்று ஆராய்வதுடன் தாம் பிறந்து வளர்ந்த நெறியில் அல்லது சமயத்தில் தனிப்பட்ட தொடர்புடையராய் தம்மருட் பிரகாசத்துக்கு வழிகாட்டியதென்னும் தனிப்பற்றுடையராய் வாழ்வார்கள்.

மனிதன் தன் ஆன்மீகத்தையும் அகத்தூய்மையையும் மறந்தாலொழிய சமயச் சண்டையிலும் சாத்திரச் சண்டையிலும் ஈடுபடான். சுளையிருக்கத் தோல் நிறம், தடிப்புக்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து அல்லற்படுபவரையொப்பவரே சமய வெறியர். ஆகவே சாமியென்பவர் சமயக் கொள்கைகளுக்காக விதண்டாவாதமும் வீண் சண்டையும் செய்பவரல்லர். போதனைக்குத்தக்க சாதனையும் சாதனைக்குத் தக்க போதனையும் செய்வர் இவர். உவக்கப்பேசி உவட்டத் தக்க செயல்களில் இறங்குபவரல்லர். உபதேசம் செய்வதோடு அமையாது உளத்தாலும் செயலாலுங் கூட அவர்கள் பண்புடையராவர். மெஞ்ஞானத்தைப் போல் விஞ்ஞான வளர்ச்சியிலும் மேம்பட்டுறைவர். இயற்கையை ஆண்டு சாதகமாக்க விஞ்ஞானமும் இந்திரியங்களை வசப்படுத்தி இருதயத்தைப் பண் படுத்த மெஞ்ஞானமும் உதவும் எனக் கருதுவர். மெய்ப்பாட்டுணர்ச்சிகளை மெய்யறிவுக்கு அடங்கச் செய்வர். பழைய ஆன்மார்த்தக் கொள்கைகளுக்கும் நவீன லௌகீக வாதக் கொள்கைகளுக்கும் இடையில் ஒன்றினைக் கைக்கொள்வதாயின் திண்ணமாய் முந்தியதையே கைக்கொள்வர். ஏனெனில் அதனால் இன்றைக்கும் என்றைக்கும் பயனுண்டு. மற்றதனால் இன்றைக்கும் என்றைக்கும் நாசமே விளையும். பொய்க்கும் கொஞ்சப் பொய்க்கும் இடையில் எதனைக் கொள்ளலாம் என்ற நிலையில் இரண்டையும் கொள்ளாது விடுவர். ஏனெனில் சத்தியம் ஒன்றே வெற்றியை அளிக்கும் என்பது அவர் உறுதியாகும்.

பிறந்து வளர்ந்த நாட்டின் சிறந்த குணங்கள் எல்லாம் ஒருங்கே பொருந்தி மிளிரும் தெய்வீக புருஷரே சாமிகள். ஒவ்வொரு நாடும் தன் கலாசாரத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கொண்டாலொழிய உலக கலாசாரம் ஓம்பாது என்னும் உளப்பண்புடையராய் செயலாற்றுபவரே சாமிகள். மற்றவர் கலாசாரத்தைப் பற்றிக் கருதாமல் அதனை வளர்க்கத் தடையாயும் வதிபவர் உண்மையில் தமக்குத் தாமே தடைபோடுகிறார் என்றும் கூறலாம். தம்மிடத்தும் தம்மக்களிடத்தும் உள்ள நிறையியல்புகளைப் பேணுதலோடு குறைகளையும் ஒப்புக்கொண்டு அவற்றையும் நிறையாக்க முயல வேண்டும். நிறைகளை மட்டும் புகழ்ந்து கொண்டு குறைகளை மூடி மறையார் உண்மை ஞானிகள். உடலில் உள்ள புண்ணை மூடி மறைத்தால் அது ஒருவேளை உடையானையே முடித்துவிடும். ஆகவே அதனை வெளிக்காட்டி வைத்தியஞ் செய்வித்தால் அது மாறுவதோடு உடற் சுகமும் ஏற்படுமல்லவா?

மானிடவர்க்கமெல்லாம் தானிடர் சிறிது மெய்தாது சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழ்தலில் கருத்துடையர். சிலர் தனி மனிதன் சுதந்திரத்திலேயே சமுதாய சுதந்திரமும் நாட்டின் முன்னேற்றமும் அமைந்துள என்பதை ஆதாரக் கொள்கையாகவுடையர். அக மலர்ச்சியே புறமலர்ச்சி அல்லது வெளியழகுமாகும். நாட்டின் திறமைக்கும் வலிமைக்குந் தகச் சுயமுயற்சியால் ஆன்ம மலர்ச்சி யெய்துதலே ஒவ்வொரு நாட்டினரதும் உண்மை வளர்ச்சியாகும். மற்றைய நாட்டவர் செய்வதைக் கண்டபாவனையில் கொண்டை முடிப்பவர்போல் பின்பற்றப்படாது. தேசமக்களின் உண்மை உழைப்பி னால் உயர்வடைதலே தேசாபிமானத்துக்கு உதவும். தமக்கெனச் சுயமுயற்சி செய்யாமல் வெளி நாட்டவரிடம் கடனும்பட்டு வேறு உதவிகளும் பெற்று அவர்களைப் போலத் தாமும் சுதந்திர புருடர் என்று கூத்தாடுவது குரங்குச் சேட்டையும் கொள்கையற்ற கோமாளித்தனமுமன்றி வேறல்ல. தன்கையே தனக்குத் துணை அல்லது சுய உதவியே சுயமரியாதை என்பதே சாமிகள் சித்தாந்தமாகும். மற்ற நாட்டவருக்குக் கொடுத்தும் அவரிடமிருந்தும் வேண்டியதை எடுத்தும் பரஸ்பர நல்வாழ்விலும் நம்பிக்கை வேண்டும் உதாரணமாக மேல் நாட்டவரின் உழைப்பூக்கம், விஞ்ஞான அறிவு, சுதந்திரப்பிரியம் ஆகியவற்றை யாம் பின்பற்றலாம். அவர்களின் பிறநாட்டாதிக்கம், பொருள் தேட்டத்திற்காகப் புரியும் இம்சை முதலியனவற்றைக் கனவிலும் கைக் கொள்ளப்படாது. பழிக்குப் பழி வாங்குதல், பிற மக்களை அடக்கி ஒடுக்கி ஒறுத்தல் ஆதிய மேல்நாட்டு வல்லரசுகளின் வழிகளை யாம் எள்ளல் வேண்டும். இதனாலன்றோ எத்தனையோ ஐரோப்பிய வல்லரசுகள் மங்கி மறைந்தன. இன்றும் சில மறைந்தொழிகின்றன. வரலாறுகளில் இவற்றைக் கண்டறிந்த பின்பும் சில ஐரோப்பிய வல்லரசுகள் இக்குணக்கேடுகளை விடுகின்றில. மக்களோடும் கொள்கைகளோடும் பிணங்காது என்றும் இணங்கி வாழ்வதே இவர்கள் கொள்கை. இணக்கமும் ஆன் மீகச் சக்தியில் நம்பிக்கையுமே இவர்களது இருபெரும் சிறப்புகள் ஆகும்.

இன்றைய உலகு நாச வழிக்கே விரைகின்றது. இதனைத் தடுத்து நிறுத்தத் தொண்டர்கள் தம் வாழ்க்கை யாலும் போதனையாலும் முயற்சிக்க வேண்டும். உண்மையை உணர்ந்து அதனை ஏனையோரும் உணரக்கூடிய நெறியினைக் காட்ட வேண்டும். மேடைகளில் ஏறிப் பிரசங்கங்கள் செய்தலும், ஆடைகளில் வேடம் போட்டுச் சாமிமார் என்றும் குருமார் என்றும் உளறி வாழாது தமது தூய உண்மையான வாழ்வினால் மற்றவர்களைக் கவர வேண்டும். ஆன்மீகம் பண்டமாற்றுச் செய்யக் கூடிய பொருளன்று. அது ஒன்றிலிருந்து ஒன்றுக்குப் பற்றிச் செல்லும் ஒளிக்கதிர் போன்றது. இவ்வொளியைக் கொழுந்து விட்டெரியச் செய்தல் வேண்டும். அப்போது இருளில் இருந்து கலங்கும் ஏனையோர் இவ்வெளிச்சத்துக்கு இயல் பாகவே வந்து சேர்வர்.

சுயநலமற்றவராதலோடு பிறர் நல சேவையில் நாட்ட முடையராக வேண்டும். பயமற்ற ஒருவரே பயந்தாரைத் தேற்றுவர். தான் கடைத்தேற முயற்சிப்பதோடு இடையறாது ஏனையோர் கடைத் தேறவும் உதவுதல் வேண்டும். தனது ஒவ்வொரு மூச்சிலும் துறவும் வைராக்கியமும் மிளிர வேண்டும். தனது கை என்றும் பிறருக்காகக் கருமஞ் செய்தல் வேண்டும். ஆசையையூட்டும் பொருள்களையும் காமத்தையும் நஞ்செனவும், பேரையும் புகழையும் குப்பையெனவும், நரக வாயில்களெனவும், பட்டம் பதவிகளை வெறியூட்டும் மதுவகைகளெனவும் கொள்ளுபவனே ஆன்மசாதனை செய்பவன்.

இவன் வாழ்வில் உள்ள பேச்சுக்கள் யாவும் கடவுளைப் பற்றியும் மெய்மையைப் பற்றியுமே எழும். கல்லிலும் பொன்னிலும் கடவுளைக் காண்பதோடமையாது உயிரினங்கள் யாவையும் நடமாடுந் தெய்வங்களாகவே பேணி மதிக்க வேண்டும். ஒடுக்கப்பட்டவர்களுக்காக இரங்குமளவுக்காவது ஒடுக்கி நடத்துகிறவர்களிலும் இரக்கம் காட்ட வேண்டும்.

"சொல் எல்லாம் மோனம்; தொழில் ஆதியும்
மோனம்; எல்லாம் நன்மோன நிறைவே"

- நற்சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருவகை அழகு

திருஞான சம்பந்தர் தென் திருமுல்லை வாயிலுக்கு வருகிறார். அந்தக் குழந்தை பிரபஞ்சம் முழுவதையுமே அழகாகப் பார்க்கும் இயல்புடையது. பொதுவாக இளங் குழந்தைகள் எதைப் பார்த்தாலும் ஆவலோடு பார்க்கும். ரெயில் வண்டியில் போகும் போது நாம் ஏதோ ஒரு நாவல் புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு படித்துப் பொழுது போக்குவோம். ஆனால் குழந்தையோ இருக்கையின் ஓரத்தில் இடம் வேண்டுமென்று முரண் பிடித்து உட்கார்ந்து திறந்த புத்தகமாகிய வெளிக் காட்சி களைப் பார்த்துச் சுவைத்துக் கொண்டிருக்கும். முள் வேலியைக் கண்டும் களிக்கும்; அதில் படர்ந்த முல்லைக் கொடியையும் மலரையும் கண்டுகளிக்கும். எல்லாம் அதற்குப் புதுமை.

ஞானசம்பந்தக் குழந்தையும் அப்படித்தான் பார்க்கிறது. ஒரு தலத்துக்குப் போனால் அங்கே திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனைக் கண்டு இன்புறும்; எம்பெருமானின் அங்க அடையாளங்களை ஊன்றிக் கவனித்து அவற்றின் அழகிலே சொக்கி நிற்கும். கோயிலுக்கு வெளியில் ஊரிலும் ஊர்ப் புறத்திலுள்ள சோலைகளிலும் வயல்களிலும் உள்ள இயற்கையழகையும் கண்டு களித்துக் கவி பாடும்.

தென் திருமுல்லைவாயில் சோழ நாட்டில் சீர்காழிக்கு அருகில் உள்ளது. அங்கே சென்று வழிபட்ட போது இறைவனையும் தரிசித்தார். இயற்கையையும் கண்டு களித்தார். அவருடைய உள்ளம் இந்த இருவகைக் காட்சியாலும் நிரம்பி இன்பம் பொங்கலிடுகின்றது. நாமாக இருந்தால் அந்த அழகைச் சொல்ல முடியாமல் திணறுவோம். சம்பந்தப் பெருமானோ நற்றமிழ் வல்லவர்; அற்புதமான கவிதை பாடுபவர். அவர் உள்ளத்தே தேங்கி யிருந்த அழகு வெள்ளம் கவிதை மடை வழியாகப் பாய்கிறது.

இறைவனுடைய திருக்கழுத்தைக் காண்கிறார். அது நீலகண்டம். ஆலகால நஞ்சை இறைவன் உண்டு அதைத் தன் கண்டத்தில் வைத்திருக்கிறான். "கறை நிறுத்திய கண்டன்" அவன். அந்தக் கண்டத்தைத் தேவர்கள் கண்டால் பழைய நினைவு வரப்பெற்று அஞ்சுவார்கள் நல்லவேளை! இறைவன் அதைத் தன் கழுத்தில் சிறைப்படுத்தி விட்டதனால் நாம் உயிர் பிழைத்தோம்" என்று ஆறுதல் பெறுவார்கள்.

ஆனால் உண்மையை உணர்ந்த புலவர்கள் இறைவனுடைய கருணையை அந்த நீலகண்டத்தில் காணுவார்கள். திருமேனி முழுவதும் சிவப்பாக உள்ள இறைவன் திருக்கழுத்தில் அந்தக் கறுப்பு நீலமணி போல அழகாக இருக்கிறது.

"கறை மிடறு அணியலும் அணிந்தன்று"

என்று புறநானூற்றில் பெருந்தேவனார் பாடுகிறார். அந்தக் கறுப்பு இறைவன் திருக்கழுத்தை அழகு செய்கிறதாம். "அணியலும் அணிந்தன்று" என்று அழுத்தமாகச் சொல்கிறார். மிக்க அழகைத் தருகிறது என்பது பொருள். "போயே போய்விட்டான்" என்று நாம் சொல்கிறோம். அவன் நிச்சயமாகப் போய்விட்டான் என்று அழுத்தம் கொடுக்கவே அப்படிச் சொல்கிறோம். அவ்வண்ணமே "அணியலும் அணிந்தன்று" என்பதற்கு நிச்சயமாக அழகு செய்கிறது என்று பொருள் கொள்ள வேண்டும்.

அந்த விடம் தோன்றிய போது தேவர்கள் நடுங்கினர். யாவரும் அதன் பக்கத்தில் போக அஞ்சினர். "ஒருவரும் உண்ணாத நஞ்சு" என்று இளங்கோவடிகள் பாடுவார். அந்த நஞ்சை உண்டான் இறைவன். "தலைவிதியே" என்றா உண்டான்? ஆவலோடு உண்டான். "நம்முடைய குழந்தைகள் பிழைக்க வேண்டுமே" என்ற கருணை உள்ளத்திலே பொங்க அதை உண்டான். அதன் கரிய நிறம் அந்தக் கழுத்திலே நன்றாகத் தெரிகிறது. அது புதிதாக வந்த நிறம். இதை ஞானசம்பந்தர் சொல்கிறார்.

"துளி மண்டி உண்டு நிறம் வந்த கண்டன்"

நஞ்சின் துளியைக் கருணை மிகுதியால் உண்டு. அதன் நிறம் புதிதாக வந்த திருக்கழுத்தை உடையவன். என்பது பொருள். ஆலகாலவிடம் எந்த அளவில் இருந்தது? நமக்குத் தெரியாது. தேவர்களைக் கேட்டால், அடேயப்பா! அது மலை போல அல்லவா பூமிக்கும் வானத்துக்கும் பரந்து நின்று பயமுறுத்தியது! என்று இப்போது சொல்லும் போது கூட அஞ்சிக் கொண்டே சொல்வார்கள். இறைவனுக்கு அது ஒரு துளியாகத்தான் இருந்தது. தேன் துளியை மிகவும் ஆவலோடு எளிதில் உண்டது போல உண்டுவிட்டான். அதனால் அதைத் துளி என்கிறார் தமிழ் வீரர்.

கழுத்திலே இயற்கையாகவே கறுப்பு மச்சம் இருக்கிறதோ? என்று ஐயுற வேண்டாம். அது புதிதாக வந்த கறுப்புத்தான் என்று தெரிய வைக்கிறார் சம்பந்தர். தேவர்களுக்கு வந்த கண்டத்தை அந்தக் கண்டம் போக்கியது. அதை விழுங்கி விட்டால் அவன் திருவயிற்றிலிருக்கும் உயிர்கள் சாம்புமாகையால் அதைக் கண்டத்திலே நிறுத்தினான். அது மட்டுமன்றி அதைக் கண்ட போதெல்லாம் தேவர்கள் தம் வலிமையின்மையையும் இறைவனின் கருணையையும் நினைந்து அகந்தையின்றி அவனைப் போற்றுவார்கள் அல்லவா? அந்த நஞ்சை உண்டதனால் இறைவனுக்குச் சோர்வு உண்டாயிற்றா? இல்லை, இல்லை. ஆனந்தமே உண்டாயிற்று. நம் குழந்தைகள் பிழைத்துக் கொண்டார்களே என்ற ஆனந்தம். அதனால் ஆனந்தக் கூத்தே ஆடுகிறான். அப்போது அவனுடைய சோதி வடிவம் சுடர்விட்டு ஒளி விடுகிறது. கலங்கரை விளக்குச் சுழலும்போது அதன் ஒளி எங்கும் பரவுவது போல ஆனந்தக் கூத்தாடும் ஐயன் ஒளிவிடும் சுடரோனாக விளங்குகிறான்.

"தடம் மன்னு துன்னு சுடரோன்"

ஆனந்தக் கூத்தை நிலையாகச் செய்து நிற்கும் நெருங் கிய சுடரை உடையவன். அவன் இந்த உலகத்தில் திருக் கோயில்களில் எழுந்தருளியிருக்கிறான். உலகத்திலுள்ள பொருள்களினூடும் இருக்கிறான். அமரர் தலைவனாக வீற்றிருக்கிறான். அவனுடைய ஆட்சி இவற்றையும் கடந் தது. அவனுடைய பேரொளி தேவர் உலகத்தையும் கடந்து பெருகுகிறது.

அந்தப் பெருமான் கருணையே வடிவான உமாதேவியை ஒரு பக்கத்தில் வைத்திருக்கிறான். கழுத்திலே நீலம் திருமேனி முழுவதும் ஒரே ஒளிச் சிதறல். இடப்பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரகத மணிப்பச்சை. இந்த இணைப்பிலே அழகு கொஞ்சிக் குலவி நடமிடுவதில் என்ன வியப்பு.

ஒளி மண்டி உம்பர் உலகம் கடந்த
உமைபங்கன்

மண்டி - பெருகி, உலகம் கடந்தவன். உமை பங்கன். உமை பங்கன் என்பது சிவனென்னும் துணையாய் நின்றது.

உமாதேவியார் தந்த ஞானப்பாலை உண்ட பெருமான் அந்தத் தேவியாரை மறப்பாரா?

இப்படி உள்ள அழகுக் கூத்தன் எங்களுக்குச் சொந்த மானவன். எங்கள் அரன். அவன் ஊர் எது தெரியுமா? என்று சொல்லித் திருமுல்லை வாயிலைப் பற்றிச் சொல்லத் தொடங்குகிறார்.

எங்கள் அரன் ஊர்

இப்படி ஒரு பாசுரத்தின் முற்பாதியில் இறைவனுடைய அழகையும் பெருமையையும் கூறினார்.

**துளி மண்டி உண்டு நிறம் வந்த கண்டன்**
**நடம் மன்னு துன்னு சுடரோன்,**
**ஒளிமண்டி உம்பர் உலகம், கடந்த,**
**உமை பங்கன், எங்கள் அரன் ஊர்**

ஊர் எப்படி இருக்கிறது? ஊரைச் சுற்றிச் சோலைகள் அவற்றையடுத்து நெற்கழனிகள் சோலைகள் அடர்ந்து தண்ணிழல் பரந்து மலர்களும் கனிகளும் குலுங்குகின்றன. இறைவனுடைய பக்தர்கள் இறைவனுக்கு அர்ச்சனை செய்ய மலர் எடுக்கவும். நிவேதனம் செய்யக் கனி செய்யவும் அங்கே வருகிறார்கள். தங்களுக்கு வேண்டிய பொருள்கள் கிடைக்கும் அந்தச் சோலையை அடைந்தவுடன் அவர்கள் உள்ளம் பூரிக்கின்றன. களிப்பு நிரம்புகிறது. அப்படியே உள்ளம் ஒன்றிய காதலர்கள் அங்கே வந்து தங்குகிறார்கள். பொழிலாட்டு அயர்கிறார்கள். அவர்களிடத்தும் களி மண்டுகின்றது. அது பலருக்கும் களி மண்டு சோலையாக உள்ளது. அங்கே உள்ள நீர் நிலையில் கமல மலர்கள் பூத்துப் பொலிகின்றன.

சோலையை அடுத்துத் தோன்றுபவை கழனிகள். அங்கே நெல் விளைகிறது. ஓரக் கால்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. சேறும் தண்ணீரும் உள்ள அந்த மருத நிலத்தில் மருதப் பெருமாட்டியின் திருமுகத்தைப் போலக் கமல மலர்கள் மலர்ந்திருக்கின்றன. சேற்றில் வளரும் இயல்பு தாமரைக்கு உண்டு. அதனால்தானே அதற்குப் பங்கஜம் (சேற்றில் தோன்றுவது பங்கம் - சேறு; ஜம் - பிறப்பது) என்ற பெயரும் உண்டாயிற்று. அந்தக் கழனிகளும் இரண்டு வகைகயில் களி மண்டும் இடமாக இருக்கின்றன. ஒன்று நல்ல களிமண் நிரம்பிய வயல்கள். அவை உணவுக்கு இன்றியமையாத நெல்லை விளைவிப்பதனால் மக்களுக்கு களிப்பை மண்டச் செய்யும் கழனிகளாகவும் இருக்கின்றன.

களி மண்டு சோலை கழனிக் கலந்த
கமலங்கள்

களிப்பு நிரம்பிய சோலைகளிலும் களி மண்டுவதற்குக் காரணமான கழனிகளிலும் இணைந்து மலர்ந்த தாமரை மலர்கள். களி - களிப்பு - களிமண்.

நீர் வளமும் நில வளமும் நிரம்பிய இவ்விடத்தில் வளரும் கமல மலர்கள் பெரியவையாய் மணம் நிறைந்து மதுவுடன் விளங்குகின்றன. தேன் வைத்த கிண்ணங்களைப் போலத் தோற்றம் அளிக்கின்றன.

தேன் எங்கே இருக்கின்றதென்று வண்டுகள் தேடி நாடி வருகின்றன. "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பிகள் " அவை எங்கேயிருந்தாலும் இங்கே பறந்து வருவதற்குரிய சிறகுகளை உடையவை அவை. கமலங்களில் மதுவானது தேங்கித் தங்கித் தெளிந்து இருக்கின்றது. பல வண்டுகள் பறந்து வந்து மண்டுகின்றன. விருந்துண்ணக் கூட்டமாக வருபவர்களைப் போல முந்திக் கொண்டு வருகின்றன. எத்தனை வண்டுகள் வந்தால் என்ன? இங்கே தேனுக்குப் பஞ்சமா? மதுவின் தெளிவை உண்ட பிறகு அந்த வண்டுகளுக்குக் களிப்பு மிகுகின்றது. ஒரே ஆனந்தம். நன்றாக உண்ட குழந்தை ஆடிப்பாடுவது போல, இந்த வண்டுகள் பாடத் தொடங்குகின்றன. உண்ட தேனின் சுவையினாலே ஊக்கமுற்று முரலுகின்றன. அவை உண்டது நாவிலே சுவைக்கும் தேன்; அதன் விளைவாக அவை வெளிப்படுத்துவன. காதாலே சுவைக்கும் இசைத்தேன். திருமுல்லைவாயிலாகிய இந்த ஊரில் இந்தக் காட்சியைக் காணலாம்.

கமலங்கள் தங்கும் மதுவில்
தெளி மண்டி உண்டு சிறை வண்டு பாடு
திருமுல்லை வாயில் இதுவே!

தாமரை மலர்களில் தங்கிய தேனின் தெளிவைக் கூட்டமாக வந்து உண்டு சிறகையுடைய வண்டுகள் பாடுகின்ற திரு முல்லைவாயில் இதுவே. தெளி - தெளிவு, சிறை - சிறகு.

முதற் பகுதியில் இறைவன் அழகைச் சொன்ன ஞான சம்பந்தர் பிற்பகுதியில் இயற்கையின் அழகைச் சொன்னார். இரண்டையும் அனுபவிக்கத் தெரிந்தவர் அவர். இறைவனிடத்தும் அழகைக் கண்டு. அந்த அழகன் படைத்த இயற்கையிலும் அழகைக் கண்டு தேனுண்ட வண்டுபாடுவதுபோல, இந்த அழகுத் தேனை உண்ட சம்பந்தப் பிள்ளையாகிய மது கரம் பாடுகிறது. பாட்டு முழுவதையும் பார்ப்போம்.

**துளிமண்டி உண்டு நிறம் வந்த கண்டன்,**
**நடம்மன்னு துன்னு சுடரோன்;**
**ஒளிமண்டி உம்பர் உலகம் கடந்த**
**உமைபங்கன் எங்கள் அரன்ஊர்**
**களிமண்டு சோலை கழனிக் கலந்த**
**கமலங்கள் தங்கும் மதுவில்**
**தெளிமண்டி உண்டு இறைவண்டு பாடு**
**திருமுல்லை வாயில் இதுவே**

அரனூர் திருமுல்லைவாயில் இதுவே என்று கூட்டுக. கழனிக் கலந்து - கழனியிலே ஒன்றி வளர்ந்த, களி மண்டு சோலை, களி மண்டு கழனி என்று இரண்டிடத்தும் கூட்டுக. இரண்டாவதில் களி என்பதற்குக் களி மண் என்றும், களிப்பு என்றும், இரு பொருளும் கொள்ளலாம்.

சிறைவண்டு என்ற அடையினால் இந்தத் தேனை உண்ணும் ஆவலால் நெடுந்தூரத்திலிருந்து பறந்து வந்த வண்டு என்ற குறிப்பைப் பெறலாம். "தண்டா மரையின் உடன் பிறந்தே தண்டேன் உண்ணா மண்டுகம்; வண்டோ கானத் திடையிருந்து வந்தே காமல் மதுவுண்ணும்" என்பதைக் காண்க.

எங்கெங்கோ உள்ள அன்பர்கள் இந்தத் திருத்தலத்துக்கு வந்து ஆனந்த நடமாடும் இறைவன் திருவடியாகிய கமலத்தில் ஊறும் ஆனந்தமாகிய தேனை உண்பார்கள் என்ற குறிப்பும் இதனால் பெறப்படும். ""அனைத்தெலும்புள் நெக ஆனந்தத்தேன் சொரியும் குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பி" என்ற திருவாசகம் இங்கே நினைப்பதற்குரியது.

இந்தத் திருப்பாட்டு 2ஆம் திருமுறையில் வருவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் பக்தியும்

1) ஆன்மாவின் தூய நிலையே பக்தி. படைக்கப்பட்ட எல்லாப் பொருளுக்கும் மேலான இறைவனின் அறிவைப் பெறுவதற்கே அதனைப் பயன்படுத்த வேண்டும். உலகப் பொருள்களில் பற்று வைத்திருக்கும் போதே அவ்வாறான பக்தியைப் பெற்றுக்கொள்ள முடியாது.

2) அமைதியான மனநிலை பக்தியை உருவாக்கு கின்றது. கடவுள் நம்பிக்கை அமைதியான நிலையை உருவாக்குகின்றது. பொறுமையும் தன்னடக்கமும் கடவுள் நம்பிக்கையை உருவாக்குகின்றன. இவற்றின் விளைவால் சுயகட்டுப்பாடு வருகின்றது. கடவுளுக் குப் பயப்படுவதில் இருந்து கடவுள் நம்பிக்கை வருகிறது.

3) உனக்குக் கடவுள் நம்பிக்கை இருந்தால் நீ கடவுளின் தண்டனைக்குப் பயப்படுவாய். இவ்வகையான பயம் உனது ஆசைகளைக் கட்டுப்படுத்தி உன்னை நெறிப்படுத்தும். நீ ஒரு தடவை ஆசைகளைக் கட்டுப்படுத்தியதும் உனக்கு வரும் துன்பங்களைப் பொறுமையாக ஏற்றுக்கொள்வாய். அவ்வாறு ஏற்றுக் கொள்வதன் மூலம் நீ கடவுள் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வாய். கடவுள் நம்பிக்கை ஒவ்வொரு உலகப் பற்றிலிருந்தும் உனது விவேகத்தை அல்லது அறிவை மாற்றிவிடும். இவ்வழியினால் விவேகம் பற்றிலிருந்து விடுபடும்போது நீ கடவுள் பக்தியைப் பெற்றுக்கொள்வாய்.

4) கடவுள் பக்தி உள்ள மனிதன் கடவுள் பற்றிய அறிவைப் பெறுமதி மிக்கதாகக் கருதுவான். அவன் கடவுளால் படைக்கப்பட்ட எந்த ஒரு பொருளையும் விட கடவுள் பற்றிய அறிவை மேலானதாக எண்ணு வான். அவன் தீவிரமாயும் இடைவிடாமலும் அவ்வா றான அறிவைத் தேடிக் கொள்வான்.

5) உலகில் இருக்கின்ற எல்லாப் பொருள்களும் கடவு ளால் கடவுளுக்காகவே படைக்கப்பட்டிருப்பதால் அவரால் படைக்கப்பட்ட எல்லாப் பொருள்களையும் விட கடவுள் மேலானவர். உயர்வானதை விடுத்து இழிவானதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்பவன் கடவுளை விட அவரால் படைக்கப்பட்ட பொருள் களையே மேலானதாகக் கருதுவான்.

6) உனது அறிவு கடவுள் பக்தியில் கவனமாக இருக்கும் வேளையில் நீ காணுகின்ற பொருள்களில் கவனம் செலுத்த மாட்டாய். கடவுளில் கவனம் இருக்கும்போது உனது உடம்பு கூட உனக்கு அன்னியமாக இருக்கும்.

7) உடம்பை விட ஆன்மா மேலானதாக இருப்பதனால் கடவுளால் படைக்கப்பட்டபொருள்களை விடக் கடவுள் மேலானவரே. ஆன்மாவை விடவும் உடம்பை மேலானதாக மதிப்பவனும், கடவுளால் படைக்கப்படட பொருள்களை மேலாக மதிப்பவனும் உருவங்களை விரும்புபவன் ஆவான்.

8) கடவுள் பக்தியில் இருந்து உனது அறிவை வேறு வழியில் திசை திருப்பினாலும், கடவுள் அல்லாத வற்றில் கவனம் செலுத்தினாலும், புலன் பொருள்களில் கவனம் செலுத்தினாலும், ஆன்மாவை விட உடம்பு பெறுமதியானதென்றும், கடவுளை விட அவரால் படைக்கப்பட்ட பொருள்கள் மேலானவை என்றும் கருதுவாய்.

9) ஆன்ம அறிவின் ஒளியே உயர்ந்த வாழ்க்கையாக இருப்பதனாலும், இந்த ஒளி கடவுள் பக்தியால் உருவாக்கப்படுவதனாலும் தெய்வ பக்தியை விட எதுவும் பெரிதல்ல என்று கூறப்படுகின்றது.

10) கடவுள் பக்தியில் அறிவு திடமாக இருக்கும் போது விவேகம் வெளியேறிவிடுகிறது. பின் விவேகத்துக்கு எந்த ஒரு அர்த்தமும் இருக்காது. அத்துடன் கடவுளால் படைக்கப்பட்ட எப்பொருளும் அர்த்தமுள்ளதாக இருக்காது. கடவுளின் எல்லையற்ற ஒளியினால் விவேகம் வெளிச்சம் பெறும்போது கடவுளால் படைக்கப்பட்ட பொருள்கள் அர்த்தமற்றவையாக மாறி விடுகின்றன. அது சூரியன் உதிக்கும்போது கண்களுக்கு நட்சத்திரங்கள் அர்த்தமில்லாதனவாகத் தோன்றுவதை ஒக்கும்.

11) விவேகத்தோடு கூடிய எல்லாச் செயல்களும் கடவுளுக்கான தீவிர ஆவலை உருவாக்கும். எல்லாவற் றுக்கும் மேலாகத் தூய தொழுகை அந்த ஆவலை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான தொழுகையின் மூலம் கடவுளை நோக்கி முன்னேறுவதால் விவேக மானது படைக்கப்பட்ட பொருள்களின் தளத்தில் இருந்து மேலெழுகின்றது.

12) பக்தியின் ஊடாக விவேகம் பரவச நிலையை எய்துகின்றது. தெய்விக அறிவினாலும், படைக் கப்பட்ட உயிர்களின் தளத்துக்கு மேலே செல்வத னாலும் விவேகம் கடவுளின் எல்லையற்ற தன்மையை உணரக் கூடியது ஆகின்றது. பின்பு ஓர் அதிசய உணர்வினால் விவேகம் தனது சொந்தக் கீழ்மையை அறிகிறது. " நான் எவ்வளவு கீழானவன். என்னால் இதயம் துழைக்கப்படுகின்றது. அதனால் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமற்ற உதடுகள் உள்ளவனாக இருக்கின்றேன். அத்துடன் நான் சுத்தமற்ற உதடுகள் உள்ளவர்களோடு வாழ்கின்றேன். எனது கண்கள் அந்த அநேகரின் தலைவனேயே காண்கின்றன".

13) கடவுள் மீது பக்தி செலுத்துபவன் தன்னைப் போல மற்றவர்களையும் பக்தி பண்ணுவிக்க முடியாது. இருந் தாலும் அவன், பேராசைகளைத் தூய்மைப்படுத்தாத வர்களை எண்ணித் துக்கப்படுகின்றான். ஆனால் அவர் கள் தமது வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்ளும் போது அவன் எல்லையற்ற மகிழ்ச்சி அடைகின்றான். அந்த மகிழ்ச்சிக்கு அவன் எந்த எல்லையையும் அறிய மாட்டான்.

14) புலன் இச்சைகளினால் நிரம்பியிருக்கின்ற ஒருவனது வெறுப்புத் தூய்மைப்படுத்தப்படாமல் இருக்கும்.

15)எந்தவிதமான பிழை செய்த மனிதனாக இருந்தாலும் அவனுக்கு எதிராக எமது இதயத்தில் ஏதாவது வெறுப்பின் அடையாளத்தை நாம் காணுவோமாயின் நாம் கடவுள் பக்திக்கு அருகதை அற்றவரே. எந்த ஒரு மனிதனையும் வெறுப்பதில் இருந்து பக்தி எம்மைப் பூரணமாக விலக்கிவிடும்.

16) கடவுள் மீது பக்தி உடையவன் கடவுளினது கட்டளைகளைப் பின்பற்றுவான். நீங்கள் ஒருவர் மீது மற்றொருவர் அன்பு செய்வதே பிரதான கட்டளை. தனது அயலவனிடம் அன்பு காட்டாதவன் அந்தக் கட்டளையைப் பின்பற்ற முடியாதவன் ஆகின்றான். இதனால் அவன் கடவுள் மீதும் பக்தி செலுத்த முடியாதவன் ஆகின்றான்.

17) எல்லா மனிதரிடமும் அன்பு காட்டுபவன் கட வுளால் ஆசீர்வதிக்கப்பட்டவன்.

18) தூய்மை அற்றவை மீதும், மாறுகின்றவை மீதும் பற்று வைக்காதவன் கடவுளின் அருளுக்கு உரியவன் ஆகின்றான்.

19) புலன் பொருள்கள் எல்லாவற்றையும் கடந்தவன தும், தெய்விக அழகில் என்றும் மகிழ்பவனதும் விவேகம் கடவுளின் அருளைப் பெற்றதாகும்.

20) நீ உடம்பின் ஆசைகளுக்காகப் பொருள்களைச் சேகரித்தாலும், மாறும் பொருள்களுக்காக உனது அயல வன் மீது வெறுப்புக் காட்டினாலும் கடவுளைத் தொழு வதற்குப் பதிலாகப் பிராணிகளையே தொழுவாய்.

21) உனது உடம்பை நோயில் இருந்தும், புலன் இன்பங் களிலிருந்தும் காத்துக் கொள்வாய் ஆயின் கடவுள் மீது பக்தி செலுத்த அவை உனக்கு உதவியாக இருக்கும்.

22) உலக ஆசைகள் எல்லாவற்றையும் துறந்தவன் அவை எல்லாவற்றையும் விலக்கிவிட்டு மிக உயர்ந்த நிலைக்குத் தன்னைத் தயாராக்குகின்றான்.

23) கடவுள்நம்பிக்கை உள்ளவன்தனது அயலவனையும் நேசிப்பான் என்பது உறுதி. அவ்வாறான ஒரு மனித னால் பணத்தைப் பதுக்கி வைத்திருக்க முடியாது. அவன் கடவுள் தன்மைக்கு ஏற்ற ஒருவகையில் அந்தப் பணத்தைப் பகிர்ந்து கொள்வான். தேவை உள்ள எல்லோருக்கும் அவன் தாராளமாகக் கொடுப்பான்.

24) கடவுளைப் போலத் தானம் வழங்குபவன் நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் இடையேயும், நீதியானவர்களுக்கும் அநீதியானவர்களுக்கும் இடையே யும் வேறுபாடு காட்டமாட்டான். மனிதர் தம் உடம் பைப் பேணுவதற்காக இந்த வகையில் வித்தியாசம் பார்க்காது அவன் அவர்களுக்கு வழங்குவான். அவன் அவரவரது தேவைக்கு இணங்க வழங்குவான். எனினும் நியாயமான மனிதனின் உள்நோக்கத்தைப் பொறுத்தவரையில் கெட்டவனை விட நல்லவனையே அவன் விரும்புவான்.

25) கடவுள் இயல்பாகவே நல்லவரும், கருணை உள்ளவரும் ஆவார். அவர்தான் படைத்த எல்லா மனிதர் மீதும் சமமாக அன்பு செலுத்துவார். நல்லவனது சங்கல்பம் கடவுளோடு ஐக்கியமாக இருப்பதால் அவன் நல்லவரைப் புகழ்வான். அதேவேளை அவன் நல்ல பண்பினால் கெட்டவர்க்கும் இரக்கம் உள்ளவனாக இருப்பான். அத்துடன் அவன் கெட்டவனைத் தூய்மைப்படுத்தி இவ்வாழ்விலேயே அறவழியில் நடக் கச் செய்வான். இதேபோல நல்லவனும் பக்கம் சாராத நீதிமானானவனும் எல்லோர் மீதும் சமமாகவே அன்பு செலுத்துவான். நல்ல நடத்தையுள்ள மனிதனிடம் உள்ள இயல்பு, அவனது உள்நோக்கத்தின் தன்மை என்பவற்றுக்காக அவன் நல்ல வழியில் செல்பவனிடம் அன்பு காட்டுவான். மேலும் கெட்டவனது இயல்பு காரணமாகவும், தனது கருணையினால் அவனது இருளில் தத்தளிக்கும் வாழ்வில் இரக்கப்படுவதனாலும் அவனிடமும் பக்தன் அன்பு காட்டுவான்.

26) தானமாகப் பணம் வழங்கும் தன்மையால் ஒருவனின் பக்தி நிலையை அறிந்து கொள்ள முடியும். ஆன்மீக ஆலோசனை வழங்குவதில் இருந்தும், பொருள் கள் தேவையுள்ள மனிதருக்கு ஆதரவு வழங்குவதில் இருந்தும் அவனது பக்தியின் நிலையை மேலும் அறிந்து கொள்ள முடியும்.

27) உலகப் பொருள்களை உண்மையாகவே துறந்தவ னும், தனது அயலவர்களுக்கு உண்மையில் சேவை புரிபவனும் தீவிர ஆசைகளில் இருந்து விடுபடுகின் றான். அத்துடன் அவன் கடவுளின் அன்பிலும் பக்தியி லும் பங்கு கொள்கிறவன் ஆகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிவதொண்டன்

சோபகிருது வருடம் மார்கழி - தை

மலர் : 88 (2024 ஜனவரி - பெப்ரவரி) இதழ் : 1-2


உ

## மூவரையும் தேவரையும் ஏவலாக்கு

சற்குருயோகர் சரிதத்தில் அவர் மூவரையும் தேவரையும் ஏவல் ஆக்கியமைக்கான சான்றுகள் பல உள்ளன. அவற்றுள் பலரும் அறிந்த சில இங்கு நினைவூட்டப்படுகின்றன. இசைவல்ல அருந்ததி அம்மையார் யோகசுவாமிகள் அருளிச் செய்த அருந்துதிப் பாடலாற் பிறந்தவர் என்பது ஒன்று, பேராதனை வேலுப்பிள்ளை அவர்கள் சுவாமிகள் குடித்த குடிநீரினால் கடுஞ்சுரத்தினின்றும் காப்பாற்றப்பட்டார் என்பது இன்னொன்று. கார் விபத்தில் மரணமடைய இருந்த ஒருவரை அவர் இன்னும் சிறிது காலம் வாழட்டுமே என்று காலதேவனின் கைப்படாமற் காத்தமை மற்றொன்று.

சுவாமிகளது நற்சிந்தனைப் பாடல்களிலும் அவர் மூவரையும் தேவரையும் ஏவலாக்க வல்லவர் என்பதற்கான சான்றுகள் உள்ளன. சற்குரு தரிசனம் சகல பாக்கிய சுகம் எனும் கீதத்தில் தேவாதி தேவர்களும் செய்வார் பணிவந்து என்கின்ற வாசகம் உள்ளது. திருவருள் கைகூடுது சிந்தை களிகூருது என்ற பல்லவியைக் கொண்ட பாடலில் அதிரவரும் நமனும் அஞ்சியே பணி செய்யும் என்னும் சொற்கள் உள்ளன.

சுவாமிகள் ஒரு நற்சிந்தனையிலே

அகண்ட வெளியிலே அப்பனு மம்மையும்
அகண்ட வெளியிலே யாருயி ரெல்லாம்
அகண்ட வெளியிலே யஞ்சுபூ தங்களும்
அகண்ட வெளியிலே யானிருந் தேனே

அண்டமும் பிண்டமு மகத்திற் கண்டேன்
அண்டமும் பிண்டமு மகமாய்க் கண்டேன்
அண்டமும் பிண்டமு மகத்திற் கண்டிலேன்
அண்டமும் பிண்டமு மாயிருந் தேனே

எனப் பாடியிருக்கிறார். அண்டமும் பிண்டமும் அகத்திற் கண்டுகொண்டிருந்த சுவாமிகள் தமது அகத்திலே மூவரும் தேவரும் இருப்பதையும் கண்டு கொண்டிருந்தார் எனக் கூறுதல் தக்கதே. இதனைக் காயமொரு சிந்திரக்கோயில் என்னும் பாடலிலும் தெளிவுபடுத்தியிருக்கிறார். இப்பாடலிலே உடலை "மாய னயன்மக பதியும் அடடா மற்றுமுள்ள தேவர்களும் அரக்கர்களும் தேயுவுடன் வாயு வப்பு மண்விண் சேர்ந்திருக்குஞ் சித்திரக் கோயில் ஆதித்தனுஞ் சந்திரனும் இங்கே அளவற்ற அண்டங் களும் இங்கே வேதியருஞ் சூத்திரரும் இங்கே வேத முஞ் சூத்திரமும் இங்கே" என உளது. ஆதலால் சுவாமிகளின் காயம் எனும் சித்திரக்கோயிலில் திருமால் பிரமன் முதலாய தேவர்களும் உறைகின்றனர் என்பது தெளிவு. மேலும் திருமந்திரச் சாயலிலான ஒரு நற்சிந்தனையில் ,

"சிவனையல் லாமல் தேவரு மில்லை
சிவனையல் லாமல் சீவரு மில்லை
சிவனையல் லாமல் தேகமு மில்லை
சிவனையென் சித்தத்துட் கண்டுகொண் டேனே "

எனப்பாடுகிறார். தமது சித்தத்துள் சிவனைக் கண்டு கொண்டிருந்த சிவயோகசுவாமிகளது அகவெளியில் சிவனிடத்துள்ள தேவர்களும் உள்ளனர் என்பது தெளிவு. இத்தேவர்கள் சிவசம்பந்தம் பூண்ட சிவ யோக சுவாமிகளுக்கு ஏவல் செய்வர் என்பதும் தெளிவு. அவர் ஒருபாடலில் தாம் காலனை உதைத்த காரணத்தைக் கூறுகிறார்.

"காலனை கோலிக் கருத்தினில் ஈசனை
மேலனை வீட்டில் வெளியாய்க் கண்டேன்
மாலணை யாத மாட்சியைப் பெற்றேன்
காலனை யுதைத்த காரண மிதுவே"

சுவாமிகள் ஈசன் அருளால் காலனை வென்றவர் என்பதை இதனால் அறியக் கூடியதாக உள்ளது.

சுவாமிகள் தாம் பெற்ற இவ்வல்லபம் மாந்தர் யாவருக்கும் உள்ளதே என்பதை நற்சிந்தனையில் பலவிடத்தும் கூறியுள்ளார். "ஓமனிதனே நீ உண்மைப் பொருள்" எனத்தொடங்கிச் செல்லும் நற்சிந்தனை "ஓ சினேகிதா! நீ சிவனடியானென்று முழுமனத் தோடும் நினை, எல்லா வெற்றியு முன்னிடமுண்டு. அதற்கு மேல் வேறொன்று மில்லை. யாவு முன் காலடியில்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நிறைவுறுகிறது. யாவும் காலடியில் என்பதால் மூவரும் தேவரும் கூட 'நான் சிவடியான் என்று முழு மனத்தோடு நினைக்கும் மனிதனின் காலடியில் கிடந்து பணிசெய்வர் என்பது உறுதியேயாகும். சுவாமிகள் எழுதிய "அகமுகமாகு" எனத் தொடங்கும் திருமுகத்தில் "உன்னுள்ளே தெய்வீகத்தன்மையை உணர். நீயே உனக்குத் தலைவன். நீயே உன்னை நடத்துபவன். நீயே உலகத்துக்கு ஏகசக்கராதிபதி" என உள்ளது. ஏகசக்கராதிபதி என்பதை உணர்ந்த மனிதன் அனைத்தையும் ஆளுபவனே. அவனுக்கு மூவரும் தேவரும் அடங்கி நடப்பர். சன்மார்க்கம் என்னும் தலையங்கம் சூடிய உரைப்பகுதியிலே "ஆத்மாவே தானென அறிந்தவர்கள் ஆசை நோய்க்கு இடங்கொடுப்பாரா? அன்று. அவர்தம் பெருமையை வேத சிவாகமங்களும் புகழ்கின்றன. இவர்களைக் கண்டால் கல்லுங்கரையும். அனைத்தினும் வெற்றி யுண்டு" எனக் குறிப்பிடப் பெற்றிருக்கிறது. அனைத்தையும் வெற்றி கொள்ளும் வல்லாளனான ஆன்மஞானி மூவரையும் தேவரையும் ஏவல் கொள்ள வல்லவனேயாவான்.

மூவரும் தேவரும் ஏவல் செய்தல் பற்றி இவ்வுரையின் நடுவில் இலங்கும் இரு நற்சிந்தனைகளும் இயம்புகின்றன. இவ்விரு நற்சிந்தனைகளையும் இணையன்கள் எனலாம். மூவரும் தேவரும் ஏவல்செய்தல் மாத்திரம் அன்றி இன்னும் பல செய்திகளையும் இச்செய்யுட்கள் இணைந்து சொல்கின்றன. ஒன்று 'முனைந்து நிற்கும் காமக் குரோதம் போக்கி" என்றும், இன்னொன்று "முனைத்துவரும் சினத்தை வென்றால்" என்றும் கூறுகின்றது. ஒன்றில் 'தினைத்துணையும் மறந்திடாமல் திருநாமத்தைச் செபித்திடடா" என்றும் ஒன்றில் "தினைத்துணைப் போதும் மறவாமல் சிவத்தியானத்தில் தினந்தினம் மூழ்கு" என்றும் உளது. 'நினைத்தபடி நடந்திடடா" என ஒன்றும் "நினைத்தபடி நீணிலத்தில் வாழ்வோம்" என மற்றையதும் கூறுகின்றன. குருமொழி பற்றி "குருவேந்தன் தந்த திருவாக்கு" "குருவாக்கியம்" என்று இரண்டிலும் உளது. இவ்வாறு இரு நற்சிந்தனைகளும் இணைந்து கூறும் நல்லன எல்லாம் சேர்ந்து மூவரையும் தேவரையும் ஏவலாக்கும் முறைமையைச் செறிவுபெறக்கூறுகின்றன. இச் செறிவு நமது சிந்தனையிலும் செறிய வேண்டும் என்ற அருட்பெருக்காலேயே சுவாமிகள் இந்த நற்சிந்தனைகளை அருளியுள்ளார். இந்நற்சிந்தனைகள் நம் மனத்திற் செறிவதற்கு இவற்றை மனனஞ்செய்து பன்முறையும் ஆழ்ந்து சிந்தித்துணர்தலே தக்கது. இச் செய்யுளொன்றில் கூறப்பட்டிருத்தல் போன்று 'நல்ல மருந்து" என இவற்றை அருந்தி உத்தமராதலே தக்கது. இதற்கோர் தூண்டுதலாக இவற்றிலுள்ள நெஞ்சுருகும் அடியார்கள் கூட்டம், அனைத்துயிரும் நீ, அனைவருக்கும் தெய்வம் ஒன்று, திருநாமசெபம், சிவத்தியானத்தில் மூழ்கல் என்னும் சில விடயங்கள் பற்றி ஓருவாறு கூறப்பெறும்.

நெஞ்சுருகும் அடியார்களுடன் கூடிவாழ்தல் நன்று. இத்தகைய நடமாடும் அடியார்கள் வாய்ப்பார்க ளேயானால் அது நமது பாக்கியம். இவ்வாறு வாய்க்காவிடினும்குறையொன்றுமில்லை. பாரம்பரிய மாக வந்த பெரிய ஒரு திருக்கூட்டம் நமக்கு உளது. நாயன்மார்கள், முனிவர்கள், இருடியர் எனப் பரந்த மகாத்மாக்களது சரிதங்களைப் பயின்று அவர்களுடன் மானசீகமாக ஒன்றி வாழ்தலும் அடியாருடன் கூடி வாழ்தலேயாம். அப்பரடிகளின் நினைவு அப்பூதி அடிகளின் பிள்ளைக்கு உயிர்கொடுத்த அற்புதத்தை நம் மனதிற் பதிக்கும். மார்க்காண்டரை நினத்ததும் அவருக்காக மறலியை உதைத்த பெருமானின் அருள் நம் நெஞ்சில் நிலைக்கும், இத்தகைய அடியாருறவு காலனை உதைத்த காரணத்தை அறியத் தூண்டுதலாக அமையும்.

இணையனான இப்பாடல்களிலே 'ஆவதில்லா அழிவதில்லா ஆன்மாவை அறிந்திட்டா", 'அயலுனக்கில்லை", "நித்தியராம் என்பதை நாளும் மறவோம்" 'சுயநலம் அடியோடே மடியும்", அனைத்துயிரும் நீயே தம்பி" ஆதிய வாசகங்கள் உள்ளன. இவ்வாசகங்கள் அனைத்தும் நம் உண்மை நிலையை ஆழ நீள உரைக்கின்றன. நாம் ஆவதும் அழிவதும் போவதும் வருவதும் பெருகுவதும் சுருங்குவதும் இல்லாமல் இருந்தபடியே இருப்பவர். நாம் இங்கும் அங்கும் எங்கும் இன்றும் அன்றும் என்றும் உள்ள நித்தியர். நமக்கு அயலாக நீ ,நான், அவன், அது என்று சுட்டிக் கூறுதற்கு எதுவுமில்லை. நாம் சுட்டிறந்து நிற்பவர். சுயம் என்று சொல்வதற்கான 'நான்' எனும் பான்மை சுத்தப் பொய், ஆதலால் சுயநலம் என்பது நமக்கில்லை, நாமே எல்லாரும். எல்லாரும் நாமே. நாம் எல்லா உயிர்களுமாக இருக்கின்றோம். தேவர் முனிவர், சித்தர் எல்லாரும் நமக்குள்ளே உள்ளார்கள். நம்முள்ளே பிரமன், மால் ஆகியோரும் உள்ளனர். நமது உயிருக்கு உயிராகப் பெருமான் உள்ளார். பெருமானுடன் நமக்குள்ள சம்பந்தம் பிரிக்கமுடியாதது. அப்பெருமான் நமக்கு என்றும் காவலாக உள்ளார். நாம் அவரது குடிகள். பிறர் குடியல்லர், ஆதலால் நமனை அஞ்சோம். வருணனைப் பணி கொள்வோம். இவ்வாறே மற்றைத் தேவர்களையும் மூவரையும் ஏவலாக்கும் ஆற்றல் எமக்கு உள்ளது.

இவ்விரு பாடல்களிலும் "அனைவருக்கும் தெய்வம் ஒன்றே" எனவும் "தினைத்துணையும் மறந்திடாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ

# நற்சிந்தனை

## அனைவருக்குந் தெய்வம் ஒன்றே

அனைவருக்கும் தெய்வம் ஒன்றே - அதை
அறிந்துலகில் வாழ்வது தொண்டே

முனைந்துநிற்கும் காமக்குரோதம் போக்கிப் -பின்பு
மூவரையுந் தேவரையும் ஏவலாக்கும்

நெஞ்சுருகு மடியார்கள் கூட்டம் - இந்த
நீணிலத்தில் நன்மையெல்லாங் கூட்டும்

வினைப்பகையை வெல்வதற்கு மார்க்கங் - குரு
வேந்தன் தந்ததிரு வாக்கு

தினைத்துணைப் போதும்மற வாமல் - சிவத்
தியானத்தில் தினந்தினம் மூழ்கு

மனத்துயரை நீக்கநல்ல மருந்து - குரு
வாக்கியமொரு பொல்லாப்பு மில்லை

நினைத்தபடி நீணிலத்தில் வாழ்வோம் - நாங்கள்
நித்தியரா மென்பதை நாளும்மறவோம்

அயலுனுக் கில்லையென்று பெரியோர் - சொன்ன
அந்தரங்க மறிந்துநீ திரிவாய்

முயல முயலவின்பந் தேக்கும் - பொல்லா
மூவித ஆசைகளை நீக்கும்

சுயநல மடியோடே மடியும் - கருதி
சொன்ன சுவானுபவம் படியும்

## திருநாமத்தைச் செபித்திடடா

அனைத்துயிரும் நீயேதம்பி அதையறிந்து வாழ்ந்திடடா
தினைத்துணையும் மறந்திடாமல் திருநாமத்தைச் செபித்திடடா

வினைப்பகையை வென்றிடுவாய் வேறுபொரு ளில்லையடா
முனைத்துவருஞ் சினத்தைவென்றால் மூவர்களும் ஏவல்செய்வார்

உனைப்போலே யுத்தமர்கள் உலகத்தினி லில்லையடா
நினைத்தபடி நடந்திடடா நிட்டையிலே பொருந்திடடா

ஆவதில்லா அழிவதில்லா ஆன்மாவை யறிந்திடடா
தேவர்களும் முனிவர்களுஞ் சித்தத்திலே திகழுகின்றார்

ஒருபொல்லாப்பு மில்லைத்தம்பி உண்மையே முழுதுமடா
குருநாதன் கூற்றிதடா கும்பிட்டுக்கொண் டாடிடடா

ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாமத்தைச் செபித்திடடா" "தினைத்துணைப் போதும் மறவாமல் சிவத்தியானத்தில் தினம் தினம் மூழ்கு" எனவும் உள்ளன. மேலும் குருபரனையும் குருவாக்கினையும் "குருவேந்தன" எனவும் "ஒரு பொல்லாப்பும் இல்லை தம்பி உண்மை முழுதுமடா குருநாதன் கூற்றிதடா கும்பிட்டுக் கொண்டாடிடடா" எனவும் கூறப்பட்டுள்ளன. குரு நாதனின் மகாவாக்கியங்களைப் பொருளுணர்ந்து போற்றி, இறைவனை இடையறாது திருநாமம் செபித்தும் தியானித்தும் இருப்பவர் இறையைப் பற்றியிருப்போராவர். இவர்கள் மூவரையும் தேவரை யும் ஏவல் கொள்ளுதல் எளிது.

இப்பாடல்களிலே "பொல்லா மூவித ஆசைகளையும் போக்கு" "முனைத்து வரும் சினத்தை வென்றால், முனைந்து நிற்கும் காமக்குரோதம் போக்கி" என்றெல்லாம் உள்ளன. ஆசையற்ற இடம் வீடு. ஆசையே காமக்குரோதம் கோபம் எல்லாவற்றுக்கும் ஊற்று. ஆசையையும், ஆசையினின்று பெருகும் அனைத்தையும் வென்றவன் திருவடியைச் சேர்கிறான். திருவடியைச் சேர்ந்தவனால் மூவரையும் தேவரையும் ஏவலாக்குதல் எளிது.

சுவாமிகளது நற்சிந்தனைகள் பலவும் உருவிற் சிறியன. பொருளிற் பெரியன. ஆதலால் இவற்றை மருந்தெனவும் மந்திரமெனவும் அமுதமெனவும் கருதி கருத்தோடு படித்து மனனம் செய்து சிந்தித்துத் தெளிந்து சுவானுப வம் பெறுதலே தக்கது.

## நம்மை நாளும் வளர்த்திடும் நாதன்

அம்மை அப்பனை ஆருயிர்த் துணையை
நம்மை நாளும் வளர்த்திடும் நாதனை
இம்மை மறுமைக்கும் எம்மோ டிருப்பானை
சும்மா இருந்து தொழுவேன் யானே

சோதியாய் என்னுள் தோன்றிடும் தூயனை
ஆதியாய் விளங்கும் அம்பலக் கூத்தனை
பூதியாம் மாதனை பகலிர வெல்லாம்
நீதியாய்ப் போற்றி நிலைபெறு வோமே

கந்தனைத் தந்த கண்ணுதல் நாதனை
சிந்தனைக் கரிய தில்லை நாதனை
பந்தனை யாவும் பாறிடச் செய்த
சுந்தர நாதனைத் துதிப்போம் தினமும்

எந்தை ஈசன் எம்மான் என்றே
வந்தனை செய்து வாழ்வோ மாயின்
சிந்தை இறக்கும் செல்வமும் சேரும்
முந்தை வினையும் முற்றாய் முடியும்மே

கால காலனைக் கண்ணுதற் கடவுளை
ஆல முண்ட ஆனந்தக் கூத்தனை
நீல கண்டனை நிதமும் போற்றிடின்
ஞால மெல்லாம் நம்வச மாகுமே

கல்லா மனத்துக் கடைகெட்ட நாயேனும்
சொல்லால் துதித்துச் சுகம்பெறச் செய்த
எல்லாம் வல்ல எங்கள் குருவே
கொல்லா விரதம் கெண்ட கோவே

**சிவசிந்தனை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Sivathondan

To the Heart that yearns, the Lord draws nigh

Volume: 88 (January- February 2024 ) Issue : 1-2

## Tapas

The senses drag down to unlimited depths even those who have done great tapas! Consequently. to overcome them you must practise Sivadhyana. Only by that means can they he brought under control. Therefore, do this meditation uninterruptedly.

Whe never one dwells on sense impressions, attachment arises; from attachment springs desire; from desire, anger, from anger, delusion; and delusion, and deiusion causes one's down fall[2] Therefore, guard yourself by Sivadhyana.

Because of our pettiness our true nature is obscured and we stray from the path of Dharma. To free oneself from error and to make oneself steadfast, Sivadhyana is the best means. Though we may posses great wealth in this world, and though we may have the power to make even celestial beings serveus, we still cannot control our senses. Therefore, invoking the Grace of God, restrain the mind from wandering along the path of the senses.

It is precisely this that great sages have called tapas. If this is neglected, even though you may perform ostentatious sactifices and such like thinks, you will never achieve firmness.

## God is our all

God is the Life of our lives. Therefore we are His possession. We are His bondsmen. All our movements are His movements. We can never forged Him.

We are lacking in nothing
We are for ever.
We are everywhere.
We Know everything.

By ceaselessly meditating and contemplating in this waw. let us eliminate baser qualities and attain the higher Divine Reality.

The following rare and holy utterance of Tayumanavar bears ample testimony to this.

“Always my action is Your action, I am not other than You. because the essence of myself which I call ‘I' does not exist apart from You. Herein lies the natural harmony between Vedanta and Siddhanta.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமொழிகளில் எங்கள் ஆசான் அருள்மொழிகள்

424 பூரணமான நன்மையுளதாயின் இப்பிறப்பேயில்லை. சந்திரன் தன் கறையிருளை நீக்க முயலவில்லை. உலகம் முழுவதற்கும் வெளிச்சம் கொடுத்து இருளை யகற்றுகின்றது. அதுபோல உலக சேவையில் ஈடுபடு தல் நன்று.

424 If everything were perfect there would be no reason for this birth. The makes no attempt to dispel the darkness that covers one portion of it, it gives light to the earth and dispels darkness there. It is good to be concerned with the welfare of other people.

425 உலகில் செத்தாரைப் போல வாழவேண்டும். உழைத்துப் பற்றற்றுச் சீவித்துக் கொண்டு வேண்டிய வேண்டியவர்களுக்குப் பொருளுதவி செய்து கொண்டு வாழுதல் நன்று.

425 But live in the world as though you belonged to the dead. It is also good to work for your living. Live unattached and heb those in need of heb.

426 கரையான் கடலில் தூண்டில் போட்டவகையாக இருக்கிறோம். காலம் வரும்போது கவ்வுதற்குக் கொஞ்சம் விட்டுக் கொடுத்து இழுத்து விடுவோம்.

426 We are like the fisherman with his rod and line. We may realize the line a little when there is a bite, only to pull it all back at the prompt time.

427 இப்போது கடவுள் இருக்கிறார் என்பது வெளிப்படை ஆனால் அவர் எங்கும் இருக்கிறார். யான் எங்குமுள்ளேன். எனினும் இப்படி ஒரு கொட்டிலில் இவ்வுடலை வைத்திருக்க வேண்டியதே.

427 It is all now very clear that God exists that u;e is everywhere, and so am I, yet this body has to remain within this hut.

428 பேசாதிருந்தால் அவரை அறியலாம், துன்பம் நோய் யாவும் நன்மைக்கே வருகின்றன் வெயர்வை வெளிவர வேண்டும். அற்றேல் வருத்தம் வரும்.

428 You will know him, if you keep quiet. All your suffering and your disease are for good you must sweat and fall ill.

429 மற்றவர்கள் பறக்கிறார்கள் என்று பறக்க நினைக்க வேண்டாம். வேலை செய்து எல்லோருடனும் அன்பாகப் பழக வேண்டும். இருந்து பார்த்தால் எல்லாந் தெரியும்.

429 Don't try to fly because others do. Work and be friendly. Observe and you will understand.

430 அன்பே கடவுள். சத்தியமே கடவுள். கடவுளை உணர்தல் வேண்டும். கண்ணாற் காணுவதல்ல. எல்லாம் எங்குங் கடவுள்.

430 Love is God. Truth is God. You cannot see God with your eyes you must experience God. God is all things. God is everywhere.

431 வெள்ளம் பாயும்போது சில தடைகளை எடுத்து விட்டால் நன்றாகப் பாயும். அதற்காகவே குறிப் பறிந்து செய்யாமைக்குச் சிலவேளைகளில் ஏச்சு விழும்.

431 Running water will run faster if you remove an obstruction here and there you need not do much more.

432 வணங்குவதும் வணங்கப்படுவதும் ஒரு பொருளே. தன்னைப் பார்க்கத் தெரியாத விடத்திற்றான் புத்தகங்களைப் பார்த்தல் முடியும்.

432 Books become necessary only when knowing yourself is not possible

433 மேகம் இருள மயில் ஆடும். குயில் கூவும், கோழி கொக்கரிக்கும், ஆந்தை அலறும். இது போல மனந் தூய்மையடையப் பாடல் வரும். எம்மொழிச் சூழலி லிருக்கிறோமோ அம்மொழியிலேயே பாடல் வரும்.

433 When the sky is over cast the peacock struts, the nightingale sing, the cock crows and the owl calls. When the mind Becomes pure, song arises spontaneously.

434 வெளிச்சத்தைப் பார்த்துக் கொண்டிரு.

434 Stay seeing the light.

435 இனிமேல் இங்கே வரும்போது சும்மா வா. கொடுக்கவும் வேண்டாம். வாங்கவும் வேண்டாம்.

435 Every action has a reaction what is done with the eye reacts is the eye and what is done with the leg reacts in the leg.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டன் நிலையங்களில் மகா சிவராத்திரி பூசை பிரார்த்தனை ஒழுங்குகள்

எதிர்வரும் மாசி மாதம் 25ஆம் நாள் (08.03.2024) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலும் - செங்கலடியிலும் உள்ள சிவதொண்டன் நிலையங்களில்

## மகா சிவராத்திரி

அநுட்டிக்கப்படும். அவ்வமயம் பின்வரும் ஒழுங்கின்படி பிரார்த்தனையும் பூசையும் நடைபெறும்.

## ஒழுங்குகள்: புராண மண்டபம்

| காலம் | பூசனை | படிப்பு, தியானம் |
|---|---|---|
| முதலாம் சாமம் | அபிடேகம்<br>பூசை | விநாயகரகவல்<br>நற்சிந்தனை<br>எங்கள் குருநாதன்<br>அந்தமும் ஆதியும்<br>சிவபுராணம்<br>மௌனம் - தியானம்<br>திருமுறை |
| இரண்டாம் சாமம் | பூசை | கீர்த்தித் திருவகவல்<br>திருவாசகம்<br>கந்தபுராணம் - அடி முடி தேடும் படலம் |
| | **இடை நேரம்** | |
| மூன்றாம் சாமம் | பூசை | திருவண்டப்பகுதி<br>நமச்சிவாய மாலை<br>கோயிற்றிருப்பதிகம்<br>திருமுறை<br>நற்சிந்தனை |
| நான்காம் சாமம் | பூசை | போற்றித் திருவகவல்<br>நற்சிந்தனை விரும்பிய அடியார்கள் பாராயணம்<br>தியான மண்டபம்: மௌனம் சும்மா இருத்தல் |

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

**காலை 8.00 மணியளவில் யாழ் சிவதொண்டன் நிலையத்திலும் பகல் 11.00 மணியளவில் செங்கலடி சிவதொண்டன் நிலையத்திலும் மகேசுர பூசை நடைபெறும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

| | | |
|---|---|---|
| 01. | நற்சிந்தனை 7ஆம் பதிப்பு | 450.00 |
| 02. | NATCINTHANAI (ENGLISH EDITION) | 400.00 |
| 03. | வள்ளியம்மை திருமணப் படலம் | 150.00 |
| 04. | நற்சிந்தனைக் கீர்த்தனைகள் – சாதாரண பதிப்பு | 12.00 |
| 05. | யோக சுவாமிகள் வாழ்க்கையும், வழிகாட்டுதலும் (2ஆம் பதிப்பு) | 350.00 |
| 06. | என் நெஞ்சில் இடம்கொண்ட ஒரு பெரியார் யோக சுவாமிகள் | 100.00 |
| 07. | நமசிவாய மாலை | 35.00 |
| 08. | தியான காலச் சிந்தனை (புதிய 3ஆம் பதிப்பு) | 35.00 |
| 09. | யோக சுவாமிகள் அருள்மொழிகள் (புதிய பதிப்பு) | 250.00 |
| 10. | சிவத் தியான மாலை (உரையுடன்) | 20.00 |
| 11. | தாயுமான சுவாமிகள் திருப்பாடல் மூலமும் பொழிப்புரையும் | 200.00 |
| 12. | தாயுமான சுவாமிகள் பாடல் (மூலம் மட்டும்) | 80.00 |
| 13. | சைவத் திருமுறைத் திரட்டு (புதிய 5ஆம் பதிப்பு) | 300.00 |
| 14. | KANDHAPURAANAM | 400.00 |
| 15. | YOGASWAMI TREASURED MEMORIES | 300.00 |
| 16. | YOGASWAMI LIFE AND SPIRITUAL GUIDANCE | 500.00 |
| 17. | HOMEAGE TO YOGASWAMY | 10.00 |
| 18. | சண்முக கவசம் | 25.00 |
| 19. | முருகன் திருப்பாடற் திரட்டு | 50.00 |
| 20. | சிவஞான சிததியார் | 500.00 |
| 21. | சர்வஞானோத்திர ஆகம ஞானபாத வசனம் | 50.00 |
| 22. | திருவாசகம் | 250.00 |
| 23. | சிவதொண்டன் – செந்தமிழ் ஆங்கில திங்கள் வெளியீடு ஆண்டுச் சந்தா a) உள்நாடு | 1000.00 |
| | b) வெளிநாடு US $ | 30.00 |

மேற்படி வெளியீடுகளைக் கொழும்பில் பெறும் இடங்கள்

திரு. க. சிவராசா,
5/2, விஷ்னு ரவர்
82, W.A சில்வா மாவத்தை,
கொழும்பு – 06
தொ.பேசி : 0112559360

விண்ணப்பங்கள், கடிதங்கள், காசுக் கட்டளை, தபாற் கட்டளை, காசோலை முதலியன அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்.

Cheque, Drafts and Money Orders should be drawn in favour of
Sivathondan Society
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.


Bilingual Monthly, Registered at the G.O.P. as News Paper.
No. DOP/News/102/2023

a) Printer : Arissona Pvt Ltd
Advertising & Publications
91, Palaly road, Thirunelveli, Jaffna.
: T.P.: 021-2223222
b) Publisher S.Manivasakan
c) Published for Sivathondan Society Ltd.
434, K.K.S. Road, Jaffna, Srilanka.
: T.P.:021-2222799
d)Date of Publication: 01.01.2024
e)Editor S. Vinasithamby B.A. (Hons)
Sivathondan Nilaiyam,
Chenkalady.
T.P:065-2240272


If undelivered please return to:
The Manager, "Sivathondan Nilaiyam"
434,K.K.S. Road, Jaffna, Srilanka.

Public Library
Jaffna.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org